தமிழ்நாடு அரசு

# ஆறாம் வகுப்பு

# தமிழ்

## பள்ளிக் கல்வித்துறை

6th Tamil Front Folder.indd 1 23/05/18 2:26 PM

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - 2018

(பொதுப் பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in

## முகவுரை

குழந்தைகளின் உலகம் வண்ணமயமானது! விந்தைகள் பல நிறைந்தது! அவர்களின் கற்பனைத்திறன் கானுயிர்களையும் நட்புடன் நடைபயில வைத்திடும். புதியன விரும்பும் அவர்தம் உற்சாக உள்ளம் அஃறிணைப் பொருள்களையும் அழகுதமிழ் பேசிடச் செய்திடும்.

அப்புதிய உலகில் குழந்தைகளோடு பயணம் செய்வது மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் நிறைந்தது.

தமிழ்க் குழந்தைகளின் பிஞ்சுக்கரங்கள் பற்றி, புதிய பாடநூல்களின் துணைக்கொண்டு கீழ்க்கண்ட நோக்கங்களை அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.



6th Tamil Front Folder.indd 3 23/05/18 2:26 PM

# நாட்டுப்பண்

*ஜன கண மன அதிநாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல பங்கா*
*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா.*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

*- மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

---

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!






6th Tamil Front Folder.indd 4 23/05/18 2:26 PM

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



6th Tamil Front Folder.indd 5 23/05/18 2:26 PM



# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்



6th Tamil Front Folder.indd 6 23/05/18 2:26 PM

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை
இன்றைய இளம்தலைமுறைக்கு
அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.

பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்

ஒவ்வொரு இயலையும்
ஆர்வத்துடன் அணுக
உரைநடைஉலகம்,
கவிதைப்பேழை, விரிவானம்,
கற்கண்டு
ஆகிய தலைப்புகளாக .....

பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்து கொள்ள
தெரிந்து தெளிவோம்....

காலத்தின் பாய்ச்சலுக்கு
ஈடுகொடுப்பதாக
இணையவழி உரலிகள்...

ஆளுமை மிக்க
**ஆசிரியர்களுக்கும்**
ஆற்றல் நிறை
**மாணவர்களுக்கும்...**

பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
கற்பவை கற்றபின்....

இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக...

மாணவர்தம்
அடைவை அளவிட
மதிப்பீடு....

உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
மொழிவிளையாட்டு....

இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம்....

பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

- உங்கள் திறன்பேசியில்,கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...

# பொருளடக்கம்


| வ.எண் | பொருண்மை/இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | மொழி | இன்பத்தமிழ் * | 2 |
| | | தமிழ்க்கும்மி | 5 |
| | தமிழ்த்தேன் | வளர்தமிழ் | 8 |
| | | கனவு பலித்தது | 15 |
| | | தமிழ் எழுத்துகளின் வகை தொகை | 18 |
| 2 | இயற்கை | சிலப்பதிகாரம் * | 26 |
| | | காணி நிலம் * | 29 |
| | | சிறகின் ஓசை | 32 |
| | | கிழவனும் கடலும் | 37 |
| | | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | 43 |
| | | திருக்குறள் * | 45 |
| 3 | அறிவியல், தொழில்நுட்பம் | அறிவியல் ஆத்திசூடி | 52 |
| | | அறிவியலால் ஆள்வோம் | 55 |
| | | கணியனின் நண்பன் | 58 |
| | | ஒளி பிறந்தது | 64 |
| | | மொழிமுதல், இறுதி எழுத்துகள் | 69 |
| 4 | கல்வி | மூதுரை * | 78 |
| | | துன்பம் வெல்லும் கல்வி | 80 |
| | கண்ணெனத் தகும் | கல்விக்கண் திறந்தவர் | 83 |
| | | நூலகம் நோக்கி... | 87 |
| | | இன எழுத்துகள் | 91 |
| 5 | நாகரிகம், பண்பாடு | ஆசாரக்கோவை | 100 |
| | | கண்மணியே கண்ணுறங்கு | 102 |
| | பாடறிந்து ஒழுகுதல் | தமிழர் பெருவிழா | 105 |
| | | மனம் கவரும் மாமல்லபுரம் | 109 |
| | | மயங்கொலிகள் | 114 |
| | | திருக்குறள் * | 120 |

| வ.எண் | பொருண்மை/இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 6 | தொழில், வணிகம் | நானிலம் படைத்தவன் | 126 |
| | | கடலோடு விளையாடு * | 129 |
| | கூடித் தொழில் செய் | வளரும் வணிகம் | 132 |
| | | உழைப்பே மூலதனம் | 137 |
| | | சுட்டெழுத்துகள், வினா எழுத்துகள் | 140 |
| 7 | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | பாரதம் அன்றைய நாற்றங்கால் * | 148 |
| | | தமிழ்நாட்டில் காந்தி | 151 |
| | புதுமைகள் செய்யும் தேசமிது | வேலுநாச்சியார் | 155 |
| | | நால்வகைச் சொற்கள் | 159 |
| 8 | அறம், தத்துவம், சிந்தனை | பராபரக் கண்ணி * | 166 |
| | | நீங்கள் நல்லவர் | 168 |
| | எல்லாரும் இன்புற | பசிப்பிணி போக்கிய பாவை | 170 |
| | | பாதம் | 174 |
| | | பெயர்ச்சொல் | 178 |
| | | திருக்குறள் * | 184 |
| 9 | மனிதம், ஆளுமை | ஆசிய ஜோதி | 188 |
| | | மனிதநேயம் | 192 |
| | இன்னுயிர் காப்போம் | முடிவில் ஒரு தொடக்கம் | 196 |
| | | அணி இலக்கணம் | 199 |
| | | திருக்குறள் | 205 |


*( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி*

6Z2H3C

*மின் நூல்*

6ZBS4Z

*மதிப்பீடு*

*இணைய வளங்கள்*

# ஆறாம் வகுப்பு

## தமிழ்



6th Tamil Front Folder.indd 10 23/05/18 2:26 PM

இயல்
ஒன்று

# தமிழ்த்தேன்



## கற்றல் நோக்கங்கள்

- செய்யுளின் பொருளைச் சொந்த நடையில் கூறுதல் – எழுதுதல்
- தமிழ் மொழியின் இனிமையை உணர்ந்து போற்றுதல்
- தமிழ்மொழியின் தனிச்சிறப்புகளைப் பட்டியலிடுதல்
- தன்னம்பிக்கையுடன் தனக்கான இலக்குகளை உருவாக்குதல்
- எழுத்துகளின் வகை, தொகைகளை அறிதல்



6th Tamil 001-024.indd 1 23/05/18 2:57 PM

கவிதைப்பேழை

இயல் ஒன்று

# இன்பத்தமிழ்

**நுழையும்முன்**

தாய்மொழியைத் தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன. தமிழ் வணக்கம் தற்கால இலக்கிய மரபாக ஆகிவிட்டது. பாரதிதாசன் தமிழைப் பலவிதங்களில் போற்றுகிறார். கண்ணே மணியே என்று குழந்தையைக் கொஞ்சுவது உண்டு. அதுபோல அவர் நம் செந்தமிழுக்குப் பெயர்கள் பல சூட்டி மகிழ்வதைக் காண்போம்.

*தமிழுக்கும் அமுதென்றுபேர் – அந்தத்*
*தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்! **

*தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்*
*தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்! **

*தமிழுக்கு மணமென்று பேர் – இன்பத்*
*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்! **

*தமிழ் எங்கள் இளமைக்குப் பால் – இன்பத்*
*தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!*

*தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் – இன்பத்*
*தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!*

*தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் – இன்பத்*
*தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!*

– பாரதிதாசன்

**சொல்லும் பொருளும்**

நிருமித்த – உருவாக்கிய
விளைவு – விளைச்சல்
சமூகம் – மக்கள் குழு
அசதி – சோர்வு

6ZKN6M

**பாடலின் பொருள்**

அமுதம் மிக இனிமையானது. அது போலவே தமிழும் இனிமையானது. அத்தகைய இன்பம் தரும் தமிழ் எங்கள் உயிருக்கு இணையானது.

தமிழுக்கு நிலவென்றும் பெயர். இன்பத்தமிழ் எங்கள் சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான நீர் போன்றது.

தமிழுக்கு மணம் என்றும் பெயர். அது எங்கள் வாழ்விற்காகவே உருவாக்கப்பட்ட ஊர் ஆகும்.

தமிழ் எங்கள் இளமைக்குக் காரணமான பால் போன்றது. நல்ல புகழ்மிகுந்த புலவர்களுக்குக் கூர்மையான வேல் போன்ற கருவியாகும்.

தமிழ் எங்கள் உயர்விற்கு எல்லையாகிய வானம் போன்றது. இன்பத்தமிழ் எங்கள் சோர்வை நீக்கி ஒளிரச் செய்யும் தேன் போன்றது.

தமிழ் எங்கள் அறிவுக்குத் துணை கொடுக்கும் தோள் போன்றது. தமிழ் எங்கள் கவிதைக்கு வைரம் போன்ற உறுதி மிக்க வாள் ஆகும்.

### நூல் வெளி



பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துகளை உள்வாங்கிப் பாடியுள்ளார். எனவே, இவர் புரட்சிக்கவி என்று போற்றப்படுகிறார். இவரைப் பாவேந்தர் என்றும் போற்றுவர்.



## கற்பவை கற்றபின்

1. இன்பத்தமிழ் என்ற பாடலை இனிய ஓசையுடன் பாடுக.
2. தமிழை அமுது, நிலவு, மணம் என்று பெயரிட்டு அழைப்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.
3. தமிழுக்கு நீங்கள் சூட்ட விரும்பும் பெயர்களைப் பட்டியலிடுக.
4. தமிழ்க் கவிதைகள், பாடல்களைப் படித்து மகிழ்க.

(எ.கா.) தமிழே உயிரே வணக்கம்
தாய்பிள்ளை உறவம்மா, உனக்கும் எனக்கும்
அமிழ்தே நீ இல்லை என்றால்
அத்தனையும் வாழ்வில் கசக்கும் புளிக்கும்
தமிழே உன்னை நினைக்கும்
தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்

– கவிஞர் காசி ஆனந்தன்



6th Tamil 001-024.indd 3 23/05/18 2:57 PM

## மதிப்பீடு

78KEZS

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஏற்றத் தாழ்வற்ற ------ அமைய வேண்டும்

   அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு

2. நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவருக்கு ------ ஆக இருக்கும்

   அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி

3. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

   அ) நிலயென்று ஆ) நிலவென்று இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று

4. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ---------

   அ) தமிழங்கள் ஆ) தமிழெங்கள் இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்

5. அமுதென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று

6. செம்பயிர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர் இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

**இன்பத்தமிழ் பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) விளைவுக்கு | - | பால் |
| ஆ) அறிவுக்கு | - | வேல் |
| இ) இளமைக்கு | - | நீர் |
| ஈ) புலவர்க்கு | - | தோள் |

**ஒத்த ஓசையில் முடியும் (இயைபுச்) சொற்களை எடுத்து எழுதுக.**

(எ.கா.) பேர் – நேர்

**குறுவினா**

1. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
2. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?

**சிறுவினா**

1. இன்பத் தமிழ் – பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.
2. விளைவுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?

**சிந்தனை வினா**

வேல் என்பது ஓர் ஆயுதம். தமிழ் ஏன் வேலுடன் ஒப்பிடப்படுகிறது? உங்கள் கருத்தைக் கூறுக.




6th Tamil 001-024.indd 4 23/05/18 2:57 PM

கவிதைப்பேழை

# இயல் ஒன்று

# தமிழ்க்கும்மி




கூட்டமாகக்கூடிக் கும்மியடித்துப் பாடி ஆடுவது மகிழ்ச்சியான அனுபவம். கும்மியில் தமிழைப் போற்றிப்பாடி ஆடுவது பெரும் மகிழ்ச்சி தருவதாகும். வாருங்கள்! தமிழின் பெருமையை வாயாரப் பேசலாம். காதாரக் கேட்கலாம். இசையோடு பாடலாம். கும்மி கொட்டி ஆடலாம்.

78UB2F

*கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி, இளங்*
*கோதையரே கும்மி கொட்டுங்கடி – நிலம்*
*எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்*
*எட்டிடவே கும்மி கொட்டுங்கடி!*

*ஊழி பலநூறு கண்டதுவாம், அறிவு*
*ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம் – பெரும்*
*ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்*
*அழியாமலே நிலை நின்றதுவாம்!*

*பொய் அகற்றும்: உள்ளப் பூட்டறுக்கும் – அன்பு*
*பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும் – உயிர்*
*மெய்புகட்டும்; அறமேன்மை கிட்டும்; இந்த*
*மேதினி வாழ்வழி காட்டிருக்கும் !*

– பெருஞ்சித்திரனார்



## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| ஆழிப் பெருக்கு | - கடல் கோள் | ஊழி | – நீண்டதொருகாலப்பகுதி |
| மேதினி | - உலகம் | உள்ளப்பூட்டு | – அறிய விரும்பாமை |



6th Tamil 001-024.indd 5 23/05/18 2:57 PM

## பாடலின் பொருள்

இளம்பெண்களே! தமிழின் புகழ் எட்டுத்திசைகளிலும் பரவிடும் வகையில் கைகளைக் கொட்டிக் கும்மியடிப்போம்.

பல நூறு ஆண்டுகளைக் கண்டது தமிழ்மொழி. அறிவு ஊற்றாகிய நூல்கள் பலவற்றைக் கொண்ட மொழி. பெரும் கடல் சீற்றங்கள், கால மாற்றங்கள் ஆகிய எவற்றாலும் அழியாமல் நிலைத்திருக்கும் மொழி.

பொய்யை அகற்றும் மொழி, தமிழ். அது மனத்தின் அறியாமையை நீக்கும் மொழி; அன்புடைய பலரின் இன்பம் தரும் பாடல்கள் நிறைந்த மொழி; உயிர் போன்ற உண்மையை ஊட்டும் மொழி ; உயர்ந்த அறத்தைத் தரும் மொழி. இந்த உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளையும் காட்டும் மொழி தமிழ்மொழி .

### நூல் வெளி



பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் மாணிக்கம். இவர் பாவலரேறு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம் முதலான நூல்களை இயற்றியுள்ளார். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களை நடத்தினார். தனித்தமிழையும் தமிழுணர்வையும் பரப்பிய பாவலர் இவர்.

இப்பாடல் கனிச்சாறு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது.

## கற்பவை கற்றபின்

1. தமிழ்க்கும்மி பாடலை இசையோடு பாடி மகிழ்க.

2. பின்வரும் கவிதை அடிகளைப் படித்து மகிழ்க.

வான்தோன்றி, வளி தோன்றி, நெருப்புத் தோன்றி
  மண் தோன்றி, மழை தோன்றி, மலைகள் தோன்றி
ஊன் தோன்றி, உயிர் தோன்றி, உணர்வு தோன்றி,
  ஒளி தோன்றி, ஒலி தோன்றி, வாழ்ந்த அந்நாள்
தேன் தோன்றியது போல மக்கள் நாவில்
  செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி!

– வாணிதாசன்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

794743

1. தாய் மொழியில் படித்தால் ------ அடையலாம்
   அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை
2. தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ------ சுருங்கிவிட்டது
   அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று
3. செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_______
   அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ் இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்
4. பொய்யகற்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது_________
   அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும்
   இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்
5. பாட்டு+ இருக்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது________
   அ) பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும் இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும்
6. எட்டு + திசை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது_________
   அ) எட்டுத்திசை ஆ) எட்டிதிசை இ) எட்டுதிசை ஈ) எட்டிஇசை

**நயம் உணர்ந்து எழுதுக.**

1. பாடல் அடிகளில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களை எடுத்து எழுதுக.
2. பாடல் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களை எடுத்து எழுதுக.

**குறுவினா**

1. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
2. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

**சிறுவினா**

1. கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?
2. தமிழ்க் கும்மி பாடலின்வழி நீங்கள் அறிந்துகொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.

**சிந்தனை வினா**

தமிழ் மொழி அறியாமையை எவ்வாறு அகற்றும்?




6th Tamil 001-024.indd 7 23/05/18 2:57 PM

உரைநடை உலகம்

# இயல் ஒன்று

# வளர்தமிழ்




மூத்த தமிழ் மொழி என்றும் இளமையானது; எளிமையானது; இனிமையானது; வளமையானது; காலத்திற்கேற்பத் தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்வது. நினைக்கும்போதே நெஞ்சில் இனிப்பது. நம் வாழ்வைச் செழிக்கச் செய்வது. உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழ் மொழியின் சிறப்புகளை அறியலாம் வாருங்கள்.

மனித இனம் கண்டறிந்த சிறந்த கண்டுபிடிப்பு மொழி. மனிதரைப் பிற உயிரினங்களிடம் இருந்து வேறுபடுத்தியும் மேம்படுத்தியும் காட்டுவது மொழி. மொழி, நாம் சிந்திக்க உதவுகிறது. சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுகிறது. பிறர் கருத்தை நாம் அறிய உதவுவதும் மொழியே. உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இவற்றுள் சில மொழிகள் மட்டுமே பேச்சு வடிவம், எழுத்து வடிவம் இரண்டையும் பெற்றுள்ளன.

உலக மொழிகள் பலவற்றுள் இலக்கண, இலக்கியவளம் பெற்றுத் திகழும் மொழிகள் மிகச்சிலவே. அவற்றுள் செம்மை மிக்க மொழி என ஏற்றுக் கொள்ளப்பட்டவை சில மொழிகளே! தமிழ்மொழி அத்தகு சிறப்பு மிக்க செம்மொழியாகும்.

தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை. ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை. பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார்,


*யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்*
*இனிதாவது எங்கும் காணோம்*

என்று தமிழ் மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

## மூத்தமொழி

*என்று பிறந்தவள் என்று உணராத*
*இயல்பினளாம் எங்கள் தாய்.*

என்று தமிழ்த்தாயின் தொன்மையைப் பாரதியார் கூறுகிறார்.



சாலைகள் தோன்றிய பிறகே சாலை விதிகள் தோன்றியிருக்கும். அதுபோல இலக்கியம் தோன்றிய பிறகே அதற்குரிய இலக்கண விதிகள் தோன்றியிருக்க வேண்டும். தொல்காப்பியம் தமிழில்



6th Tamil 001-024.indd 8 23/05/18 2:57 PM

நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல் ஆகும். அப்படி என்றால் அதற்கும் முன்னதாகவே தமிழில் இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டும் அல்லவா? இதனைக் கொண்டு தமிழ் மிகவும் தொன்மையான மொழி என்பதை உணரலாம்.



### எளிய மொழி

தமிழ்மொழி பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி.

உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் ஒலிகள். உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் உயிர்மெய் எழுத்துகளை எளிதாக ஒலிக்கலாம். எழுத்துகளைக் கூட்டி ஒலித்தாலே தமிழ் படித்தல் இயல்பாக நிகழ்ந்துவிடும்.

(எ.கா.) அ + மு + து = அமுது.

தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிதுதான். இதற்கேற்ப, தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.

(எ.கா.) **வலஞ்சுழி எழுத்துகள்** - அ, எ, ஔ, ண, ஞ

**இடஞ்சுழி எழுத்துகள்** - ட, ய, ழ

#### தெரிந்து தெளிவோம்

| சொல் | முதலில் ஆளப்படும் இலக்கியம் | மேற்கோள் |
|---|---|---|
| தமிழ் | தொல்காப்பியம் | தமிழென் கிளவியும் அதனோ ரற்றே |
| தமிழ்நாடு | சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் | இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இதுநீ கருதினை ஆயின் |
| தமிழன் | அப்பர் தேவாரம் | ... தமிழன் கண்டாய் |

### சீர்மை மொழி


சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல். தமிழ் மொழியின் பலவகைச் சீர்மைகளுள் அதன் சொற்சிறப்பு குறிப்பிடத்தக்கது.

உயர்திணை, அஃறிணை என இருவகைத் திணைகளை அறிவோம். உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமையவேண்டும். ஆனால் தாழ்திணை என்று கூறாமல் அஃறிணை (அல் + திணை = உயர்வு அல்லாத திணை) என்று பெயர் இட்டனர் நம் முன்னோர்.

பாகற்காய் கசப்புச்சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத காய் பாகற்காய் (பாகு + அல் + காய்) என வழங்கினர். இவ்வாறு பெயரிடுவதிலும் சீர்மை மிக்கது தமிழ் மொழி.



6th Tamil 001-024.indd 9 23/05/18 2:57 PM




## வளமை மொழி

தமிழ் வளமைமிக்க மொழி. தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்கள் மிகுந்தது தமிழ் மொழி. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களைக் கொண்டது; திருக்குறள், நாலடியார் முதலிய அறநூல்கள் பலவும் நிறைந்தது; சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களைக் கொண்டது. இவ்வாறு இலக்கிய, இலக்கண வளம் நிறைந்தது தமிழ் மொழி.

தமிழ் மொழி சொல்வளம் மிக்கது. ஒரு பொருளின் பல நிலைகளுக்கும் வெவ்வேறு பெயர் சூட்டுவது தமிழ் மொழியின் சிறப்பாகும். சான்றாக, பூவின் ஏழுநிலைகளுக்கும் தோன்றுவது முதல் உதிர்வது வரை தனித்தனிப் பெயர்கள்தமிழில் உண்டு.

ஓர் எழுத்தே ஒரு சொல்லாகிப் பொருள்தருவதும் உண்டு. ஒரு சொல் பல பொருளைக் குறித்து வருவதும் உண்டு. சான்றாக 'மா' – என்னும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருள்களைத் தருகிறது.

## வளர்மொழி

தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இயல்தமிழ் எண்ணத்தை வெளிப்படுத்தும்; இசைத்தமிழ் உள்ளத்தை மகிழ்விக்கும்; நாடகத்தமிழ் உணர்வில் கலந்து வாழ்வை நல்வழிப்படுத்தும்.

தமிழில் காலந்தோறும் பல வகையான இலக்கிய வடிவங்கள் புதிது புதிதாக உருவாகி வருகின்றன. துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள், போன்றன தமிழ்க் கவிதை வடிவங்கள். கட்டுரை, புதினம், சிறுகதை போன்றன உரைநடை வடிவங்கள்.

தற்போது அறிவியல் தமிழ், கணினித்தமிழ் என்று மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

### தெரிந்து தெளிவோம்

| தாவர இலைப் பெயர்கள் | |
|---|---|
| ஆல், அரசு, மா, பலா, வாழை | இலை |
| அகத்தி, பசலை, முருங்கை | கீரை |
| அருகு, கோரை | புல் |
| நெல், வரகு | தாள் |
| மல்லி | தழை |
| சப்பாத்திக் கள்ளி, தாழை | மடல் |
| கரும்பு, நாணல் | தோகை |
| பனை, தென்னை | ஓலை |
| கமுகு | கூந்தல் |



6th Tamil 001-024.indd 10 23/05/18 2:57 PM

## புதுமை மொழி

இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகி வருகின்றன.

இணையம், முகநூல், புலனம், குரல்தேடல், தேடுபொறி, செயலி, தொடுதிரை முதலிய சொற்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சமூக ஊடகங்களான செய்தித்தாள், தொலைக்காட்சி ஆகியவற்றிலும் பயன்படத்தக்க மொழியாகவும் விளங்குகிறது தமிழ்மொழி .



## அறிவியல் தொழில்நுட்ப மொழி

உலகில் எழுத்து வடிவம் பெறாத மொழிகள் பல உள்ளன. இந்நிலையில் தமிழ் வரிவடிவ எழுத்துகள் அறிவியல் தொழில் நுட்ப நோக்கில் உருவாக்கப் பட்டவையாக உள்ளன.

மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் என்றால் அது எண்களின் அடிப்படையில் வடிவமைக்கப்படவேண்டும். தொல்காப்பியம், நன்னூல் போன்றவை நாம் படிப்பதற்காக எழுதப்பட்டவை. ஆயினும் அவை கணினி மொழிக்கும் ஏற்ற நுட்பமான வடிவத்தையும் பெற்றுள்ளன.

### தமிழ் எண்களை அறிவோம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | கo |



மூத்த மொழியான தமிழ் – கணினி, இணையம் போன்றவற்றில் பயன்படத்தக்க வகையில் புது மொழியாகவும் திகழ்கிறது. இத்தகு சிறப்புமிக்க மொழியைக் கற்பது நமக்குப் பெருமையல்லவா? தமிழ் மொழியின் வளமைக்கும் வளர்ச்சிக்கும் பங்காற்றவேண்டியது நமது கடமையல்லவா?



6th Tamil 001-024.indd 11 23/05/18 2:57 PM

## இரண்டாயிரம் ஆண்டுகளாக வழக்கில் இருக்கும் சில தமிழ்ச்சொற்கள்.

| வ.எண் | சொல் | இடம்பெற்ற நூல் |
|---|---|---|
| 1. | வேளாண்மை | கலித்தொகை 101, திருக்குறள் 81 |
| 2. | உழவர் | நற்றிணை 4 |
| 3. | பாம்பு | குறுந்தொகை-239 |
| 4. | வெள்ளம் | பதிற்றுப்பத்து-15 |
| 5. | முதலை | குறுந்தொகை-324 |
| 6. | கோடை | அகநானூறு-42 |
| 7. | உலகம் | தொல்காப்பியம், கிளவியாக்கம்- 56 திருமுருகாற்றுபடை-1 |
| 8. | மருந்து | அகநானூறு-147, திருக்குறள் 952 |
| 9. | ஊர் | தொல்காப்பியம், அகத்திணையியல் -41 |
| 10. | அன்பு | தொல்காப்பியம், களவியல் 110, திருக்குறள் 84 |
| 11. | உயிர் | தொல்காப்பியம், கிளவியாக்கம்- 56, திருக்குறள் 955 |
| 12. | மகிழ்ச்சி | தொல்காப்பியம், கற்பியல்-142, திருக்குறள் 531 |
| 13. | மீன் | குறுந்தொகை 54 |
| 14. | புகழ் | தொல்காப்பியம், வேற்றுமையியல் 71 |
| 15. | அரசு | திருக்குறள் 554 |
| 16. | செய் | குறுந்தொகை 72 |
| 17. | செல் | தொல்காப்பியம், 75 புறத்திணையியல் |
| 18. | பார் | பெரும்பாணாற்றுப்படை, 435 |
| 19. | ஒழி | தொல்காப்பியம், கிளவியாக்கம் 48 |
| 20. | முடி | தொல்காப்பியம், வினையியல் 206 |



6th Tamil 001-024.indd 12 23/05/18 2:57 PM

## கற்பவை கற்றபின்

1. மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழி தமிழ் என்பது பற்றிக் கலந்துரையாடுக.
2. தமிழ் பேசத்தெரியாத குடும்பத்தினர் உங்கள் பக்கத்து வீட்டில் உள்ளனர். அவர்களுக்கு நீங்கள் கற்றுத் தர விரும்பும் பத்துத் தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.
3. வாழ்த்துகளைத் தமிழில் கூறுவோம்

   (எ.கா.)




பிறந்தநாள் வாழ்த்து

நீண்ட நீண்ட காலம்-நீ, நீடு வாழ வேண்டும்!
வானம் தீண்டும் தூரம்-நீ, வளர்ந்து வாழ வேண்டும்!
அன்பு வேண்டும்! அறிவு வேண்டும்! பண்பு வேண்டும்! பரிவு வேண்டும்!
எட்டுத்திக்கும் புகழ வேண்டும், எடுத்துக்காட்டு ஆக வேண்டும்!
உலகம் பார்க்க உனது பெயரை, நிலவுத் தாளில் எழுதவேண்டும்
சர்க்கரைத் தமிழ் அள்ளி, தாலாட்டு நாள் சொல்லி வாழ்த்துகிறோம்!
பிறந்தநாள் வாழ்த்துகள்! பிறந்தநாள் வாழ்த்துகள்!
இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!

– கவிஞர் அறிவுமதி

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள்__________

   அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை
2. 'இடப்புறம்' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்______

   அ) இடன் + புறம் ஆ) இடது + புறம் இ) இட + புறம் ஈ) இடப் + புறம்
3. 'சீரிளமை' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்_________

   அ) சீர் + இளமை ஆ) சீர்மை + இளமை இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை



6th Tamil 001-024.indd 13 23/05/18 2:57 PM

4. சிலம்பு + அதிகாரம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்________

அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம்

இ) சிலம்புதிகாரம் ஈ) சில பதிகாரம்

5. கணினி + தமிழ் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________

அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ் இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ்

6. "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் ________

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்

7. 'மா' என்னும் சொல்லின் பொருள்________

அ) மாடம் ஆ) வானம் இ) விலங்கு ஈ) அம்மா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ................................................

2. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் ..............................

3. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது ............................. அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.

1. தனிச்சிறப்பு ..........................................................................................................

2. நாள்தோறும் ..........................................................................................................

குறுவினா

1. தமிழ் மூத்தமொழி எனப்படுவது எதனால்?

2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

சிறுவினா

1. அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?

2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.

3. தமிழ் மொழியின் சிறப்பு குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

சிந்தனை வினா

1. தமிழ் மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?


2. தமிழ் மொழி வளர்மொழி என்பதை உணர்கிறீர்களா? காரணம் தருக.

விரிவானம்

# இயல் ஒன்று

# கனவு பலித்தது

## கடிதம்




தமிழில் இயல் உண்டு; இசை உண்டு; நாடகம் உண்டு. இவைமட்டுமல்ல அறிவியலும் உண்டு. தமிழுக்கு அறிவியல் புதிதல்ல. அன்று முதல் இன்று வரை அறிவியல் செய்திகளை இலக்கியங்கள் வாயிலாக வெளியிட்டிருக்கிறார்கள் நம் முன்னோர்கள். இலக்கியங்கள் கூறும் செய்திகளை அறிவோமா!

*இடம்: மதுரை*
*நாள்: 12-05-2017*



*அன்புள்ள அத்தைக்கு,*

*வணக்கம். நான் நலம். நீங்கள் நலமா?*

*என் பள்ளிப்பருவக் கனவு நனவாகி விட்டது. ஆம் அத்தை. இளம் அறிவியல் ஆய்வாளர் பணிக்கு நான் தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன். நாளை காலை சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பணியில் சேரவேண்டும். இந்த மகிழ்ச்சியான நேரத்தில் உங்களைத்தான் நினைத்துக் கொள்கிறேன். நான் ஆறாம் வகுப்பு படித்தபோது உங்களுக்கு ஒரு கடிதம் எழுதினேனே! நினைவிருக்கிறதா?*

அன்புள்ள அத்தை,

நான் நலம். நீங்கள் நலமா?

வருங்காலத்தில் உங்களைப் போல அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும் என்பது என் விருப்பம். நான் அரசுப் பள்ளியில் தமிழ்வழியில் படிக்கிறேன். அது உங்களுக்கும் தெரியும். தமிழில் படித்து அறிவியல் அறிஞர் ஆக முடியாது என்று பலரும் கூறுகிறார்கள். என்னால் சாதிக்க முடியாதா? தமிழில் படித்தால் என் கனவு நிறைவேறுமா? எனக்கு வழிகாட்டுங்கள்.

தங்கள் அன்புக்குரிய,
இன்சுவை.



*அதன்பிறகு நீங்கள் எனக்குத் தொடர்ந்து பல கடிதங்கள் எழுதினீர்கள். செய்திகள் பலவற்றைக் கூறி ஊக்கம் அளித்துக்கொண்டே இருந்தீர்கள். என் ஐயங்கள் எல்லாவற்றையும் தீர்த்துவைத்தீர்கள். என் கனவுகளுக்கு உரம் ஊட்டியவை உங்களின் கடிதங்களே! அக்கடிதங்களை அறிவுக் கருவூலங்களாக இன்றும் பாதுகாத்து வருகிறேன். என்னுடைய உயர்வுக்குக் காரணமான அவற்றை மீண்டும் மீண்டும் படித்துப் பார்ப்பது வழக்கமாகிவிட்டது.*



6th Tamil 001-024.indd 15 23/05/18 2:58 PM



இடம்: சென்னை
நாள்: 04-03-2006

அன்புள்ள இன்சுவை,

இங்கு நான் நலமாக இருக்கிறேன். உன் கடிதம் கிடைத்தது. ஆறாம் வகுப்பிலேயே உன் எதிர்கால இலக்கினை நீ உருவாக்கிக் கொண்டு விட்டாய். மகிழ்ச்சி! தமிழில் படித்தால் சாதிக்க முடியாது என்பது தவறான எண்ணம். சாதனையாளர்கள் பலரும் தங்கள் தாய்மொழியில் படித்தவர்களே! சாதனைக்கு மொழி ஒரு தடையே இல்லை.

நீண்ட நெடுங்காலமாகவே அறிவியல் சிந்தனைகளோடு விளங்கியவர்கள் தமிழர்கள். தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை உன்னுடன் பகிர நினைக்கிறேன்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் கலந்தது இவ்வுலகம் என்பது அறிவியல் உண்மை. தொல்காப்பியர் தமது தொல்காப்பியம் என்னும் நூலில் இக்கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியும் உள்ளார்.

கடல் நீர் ஆவியாகி மேகமாகும். பின்னர் மேகம் குளிர்ந்து மழையாகப் பொழியும். பழந்தமிழ் இலக்கியங்களான முல்லைப்பாட்டு, பரிபாடல், திருக்குறள், கார்நாற்பது திருப்பாவை முதலிய நூல்களில் இந்த அறிவியல் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

திரவப் பொருள்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவைச் சுருக்க முடியாது என்ற அறிவியல் கருத்து

**ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்**
**நாழி முகவாது நால் நாழி**

என ஔவையார் பாடலில் கூறப்பட்டுள்ளது.

போர்க்களத்தில் மார்பில் புண்படுவது இயல்பு. வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி பதிற்றுப்பத்து என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை, நரம்பினால் தைத்த செய்தியும் நற்றிணை என்னும் நூலில் காணப்படுகிறது. முற்கால இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறுவை மருத்துவம் பற்றிய செய்திகள் வியப்பளிக்கின்றன அல்லவா?

தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும். அறிவியல் அறிஞர் கலீலியோ நிறுவிய கருத்து இது. இக்கருத்து திருவள்ளுவமாலை என்னும் நூலில் கபிலர் எழுதிய பாடலில் இடம்பெற்றுள்ளது.

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்.

– தொல்காப்பியம்

கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி....

– கார்நாற்பது

நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு.

– பதிற்றுப்பத்து

கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய
நரம்பின் முடிமுதிர் பரதவர்

– நற்றிணை



6th Tamil 001-024.indd 16 23/05/18 2:58 PM

> *தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட*
> *பனையளவு காட்டும்*
>
> – கபிலர்



*தற்காலத்தில் அறிவியல் துறையில் மட்டுமன்றி. அனைத்துத் துறைகளிலும் தமிழர்கள் கோலோச்சி வருகிறார்கள்.*

*சாதனையாளர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை அறிந்துகொள். நமது ஊர் நூலகம் உனக்கு மிகவும் உதவியாக இருக்கும். நூல் வாசிப்பு உன் சிந்தனைக்கு வளம் சேர்க்கும். அறிவியல் மனப்பான்மை பெருகும்.*

*தமிழாலும் தமிழராலும் எந்தத் துறையிலும் எதையும் சாதிக்க முடியும். தொடர்ந்து முயற்சி செய். நீ வெல்வாய்! உன் கனவு நனவாக வாழ்த்துகிறேன்.*

*அன்புடன் உன் அத்தை*
*நறுமுகை*

**தெரிந்து தெளிவோம்**

**தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர்கள்**

- மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல்கலாம்
- இஸ்ரோ அறிவியல் அறிஞர் மயில்சாமி அண்ணாதுரை.
- இஸ்ரோவின் தலைவர் சிவன்.

நீங்கள் கூறியபடி நூல்கள் பலவற்றையும் தொடர்ந்து படித்து வந்தேன். உங்கள் அன்பு என் எண்ணம் நிறைவேற உறுதுணையாக விளங்கியது. தமிழ் இலக்கியங்களும் பிற நூல்களும் எனக்கு நம்பிக்கை ஊட்டின. இவற்றை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். சமுதாயத்திற்கு என்னால் இயன்ற நன்மைகளைச் செய்வேன். அதற்கேற்பப் பணியாற்றுவேன். நன்றி அத்தை.

அன்புடன்,
இன்சுவை

## கற்பவை கற்றபின்

7A5QAN

1. இக்கடிதத்திற்கு நீங்கள் விரும்பும் வகையில் வேறொரு தலைப்பிடுக.
2. உங்கள் எதிர்காலக் கனவு குறித்து ஒரு கடிதம் எழுதுக.

## மதிப்பீடு

**வினாக்கள்**


1. இன்சுவையின் எண்ணம் நிறைவேறக் காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?
2. அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.
3. கனவு பலித்தது என்ற தலைப்பு இக்கடிதத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதனை விளக்குக.



6th Tamil 001-024.indd 17 23/05/18 2:58 PM

# இயல் ஒன்று

# தமிழ் எழுத்துகளின் வகை தொகை




உலகில் உள்ள ஒவ்வொரு பொருளையும் மனிதன் உற்றுநோக்கினான். அவற்றின் இயல்புகளை அறிந்துகொண்டான். இவ்வாறே மொழியையும் ஆழ்ந்து கவனித்தான். மொழியை எவ்வாறு பேசவும் எழுதவும் வேண்டும் என்பதை வரையறை செய்தான். அந்த வரையறைகளே இலக்கணம் எனப்படும். தமிழ் எழுத்துகளின் வகை தொகை அறிவோமா!

தமிழ் மொழியின் இலக்கண வகைகள் ஐந்து.

- எழுத்து இலக்கணம்
- சொல் இலக்கணம்
- பொருள் இலக்கணம்
- யாப்பு இலக்கணம்
- அணி இலக்கணம்



ஐந்துவகை இலக்கணம்

7AELCB

## எழுத்து

ஒலி வடிவாக எழுப்பப்படுவதும் வரிவடிவாக எழுதப்படுவதும் எழுத்து எனப்படுகிறது.

## உயிர் எழுத்துகள்

உயிருக்கு முதன்மையானது காற்று. இயல்பாகக் காற்று வெளிப்படும்போது உயிர் எழுத்துகள் பிறக்கின்றன. வாயைத் திறத்தல், உதடுகளை விரித்தல், உதடுகளைக் குவித்தல் ஆகிய எளிய செயல்பாடுகளால் 'அ' முதல் 'ஔ' வரையுள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் பிறக்கின்றன.




**ஒலித்துப் பார்த்து உணர்வோம்!**

அ, இ, உ, எ, ஒ – ஆகிய ஐந்தும் குறுகி ஒலிக்கின்றன.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ – ஆகிய ஏழும் நீண்டு ஒலிக்கின்றன.





6th Tamil 001-024.indd 18
23/05/18 2:58 PM

• குறுகி ஒலிக்கும் 

ஆகிய ஐந்தும் **குறில் எழுத்துகள்.**

• நீண்டு ஒலிக்கும் 

ஆகிய ஏழும் **நெடில் எழுத்துகள்.**

ஒவ்வோர் எழுத்தையும் உச்சரிப்பதற்குக் கால அளவு உண்டு.

எழுத்தை உச்சரிக்க எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கொண்டே குறில், நெடில் என வகைப்படுத்துகிறோம்.

### மாத்திரை


*மாத்திரை* என்பது இங்குக் கால அளவைக் குறிக்கிறது. ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கண் இமைக்கவோ ஒருமுறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவாகும்.

• குறில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு - 1 மாத்திரை


• நெடில் எழுத்தை ஒலிக்கும் காலஅளவு - 2 மாத்திரை

### மெய்யெழுத்துகள்

மெய் என்பது உடம்பு எனப் பொருள்படும். மெய் எழுத்துகளை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகள் ஆகும்.



வல்லினம்
க், ச், ட், த், ப், ற்



மெல்லினம்
ங், ஞ், ண், ந், ம், ன்



இடையினம்
ய், ர், ல், வ், ழ், ள்

மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு - *அரை மாத்திரை*



6th Tamil 001-024.indd 19 23/05/18 2:58 PM

**ஒலித்துப் பார்த்து உணர்வோம்!**

- க், ச், ட், த், ப், ற் – ஆகிய ஆறும் வன்மையாக ஒலிக்கின்றன.
- ங், ஞ், ண், ந், ம், ன் – ஆகிய ஆறும் மென்மையாக ஒலிக்கின்றன.
- ய், ர், ல், வ், ழ், ள் – ஆகிய ஆறும் வன்மையாகவும் இல்லாமல், மென்மையாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிக்கின்றன.

### உயிர்மெய்

மெய் எழுத்துகள் பதினெட்டுடன் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் சேர்வதால் தோன்றுபவை உயிர்மெய் எழுத்துகள்.

மெய்யுடன் உயிர்க்குறில் சேர்ந்தால் உயிர்மெய்க் குறில் தோன்றுகிறது. மெய்யுடன் உயிர் நெடில் சேர்ந்தால் உயிர்மெய் நெடில் தோன்றுகிறது. ஆகவே உயிர்மெய் எழுத்துகளையும் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என இருவகைப்படுத்தலாம்.

### ஆய்த எழுத்து

தமிழ்மொழியில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் தவிர தனி எழுத்து ஒன்றும் உள்ளது. அது ஃ என்னும் ஆய்த எழுத்தாகும்.

ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் காலஅளவு
அரை மாத்திரை

## கற்பவை கற்றபின்

உங்கள் பெயர் மற்றும் உங்கள் நண்பர்களது பெயர்களுக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடி.

(எ.கா.) கபிலர் – 1 + 1 + 1 + ½ = 3½

## மதிப்பீடு

கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக

| வ.எண் | குறிப்பு | சொல்லின் மாத்திரை அளவு | சொல் |
|---|---|---|---|
| 1. | உயிரெழுத்தில் தொடங்கும் சொல் | 2 மாத்திரை | அது |
| 2. | ஓரெழுத்துச் சொல் | 2 மாத்திரை | |
| 3. | வல்லின உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல் | 4 மாத்திரை | |
| 4. | மெல்லின உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல் | 4 மாத்திரை | |
| 5. | இடையின உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் சொல் | 4 மாத்திரை | |
| 6. | ஆய்த எழுத்து இடம்பெறும் சொல் | 2 ½ மாத்திரை | |



6th Tamil 001-024.indd 20 23/05/18 2:58 PM

## மொழியை ஆள்வோம்!

7ANHDY

### கேட்டும் பார்த்தும் உணர்க.

1. இனிய தமிழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழ்க.
2. தமிழறிஞர்களின் வானொலி, தொலைக்காட்சி உரைகளைக் கேட்டு மகிழ்க.

### பேச்சால் வெளிப்படுத்தி மகிழ்க.

1. கேட்டறிந்த இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடிக் காட்டுக.
2. கீழ்க்காணும் தலைப்புகளில் ஒரு நிமிடம் பேசுக.

- தமிழ் இனிது
- தமிழ் எளிது
- தமிழ் புதிது

### சொல்லக் கேட்டு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| இன்பத்தமிழ் | தொல்காப்பியம் | சுப்புரத்தினம் | பன்னிரண்டு |
| பாவேந்தர் | அஃறிணை | செந்தமிழ் | ஆராய்ச்சியாளர் |
| உயிரினங்கள் | கருவூலங்கள் | | |

### கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, சுத்தம் சோறு போடும் என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல் ஆரோக்கியமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

1. பழமொழியின் சிறப்பு ______________________ சொல்வது

   அ) விரிவாகச்   ஆ) சுருங்கச்   இ) பழமையைச்   ஈ) பல மொழிகளில்

2. நோயற்ற வாழ்வைத் தருவது ______________________
3. உடல் ஆரோக்கியமே______________________ அடிப்படை
4. உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை?.
5. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

### பிறமொழிக் கலப்பின்றிப் பேசுக.

1. எங்க ஸ்கூல்லே சுற்றுலா கூட்டிட்டுப் போறாங்க.
2. பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.

### ஆய்ந்தறிக.

பெயரில் தலைப்பெழுத்தைப் பலவகையாக எழுதுகின்றோம்.

S. இனியன்,   எஸ். இனியன்,   ச. இனியன் – இவற்றுள் சரியானது எது? ஏன்?

## மொழியோடு விளையாடு

**திரட்டுக.**

**மை என்னும் எழுத்தில் முடியும் சொற்களின் பட்டியல் தயாரிக்க.**

**சொல் வளம் பெறுவோம்.**

**1. கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.**

(எ.கா) கரும்பு – கரு, கம்பு

கவிதை – ____________________

பதிற்றுப்பத்து – ____________________

பரிபாடல் – ____________________

**2. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நூல் | மொழி | கோல் | மீன் | நீதி | எழுது |
| கண் | வெளி | தமிழ் | மணி | மாலை | விண் |

(எ.கா.) விண்மீன்

**பொருத்தமான சொற்களைக் கொண்டு தொடர்களை நிரப்புக.**

அழகு, ஏற்றம், இன்பம், ஊக்கம், இனிமை, ஆற்றல், ஈடு, இசை, உணர்வு, ஏடுகள், உரிமை, என்றும், எளிதாய், உவகை, , அன்பு

(எ.கா.)

அ - அன்பு தருவது தமிழ்

ஆ - ________ தருவது தமிழ்

இ - ________ தருவது தமிழ்

ஈ - ________ இல்லாதது தமிழ்

உ - ________ தருவது தமிழ்

ஊ - ________ தருவது தமிழ்

எ - ________ வேண்டும் தமிழ்

ஏ - ________ தருவது தமிழ்



6th Tamil 001-024.indd 22 23/05/18 2:58 PM

**கட்டங்களில் மறைந்துள்ள பெயர்களைக் கண்டுபிடிக்க.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | தி | தா | ச | ன் | க |
| ர | ம் | தா | ர | சு | ச | ம் |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |
| யா | பா | தை | ஔ | வை | யா | ர் |
| ர் | ன் | ச | தா | ணி | வா | ன் |

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. ______________________________

## நிற்க அதற்குத் தக...

1. நான் தாய்மொழியிலேயே பேசுவேன்; தாய்மொழியிலேயே கல்வி கற்பேன்; தமிழ்ப்பெயர்களையே சூட்டுவேன்.

**கலைச்சொல் அறிக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வலஞ்சுழி | - | *Clock wise* | இடஞ்சுழி | - | *Anti Clock wise* |
| இணையம் | - | *Internet* | குரல்தேடல் | - | *Voice Search* |
| தேடுபொறி | - | *Search engine* | தொடுதிரை | - | *Touch Screen* |

## இணையத்தில் காண்க

உனக்குப் பிடித்த தமிழ்க் கவிஞர் பற்றிய செய்திகளை இணையத்தில் தேடி அறிக.

## இணையச் செயல்பாடுகள்

### பிழை




*படி 1*

கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்திப் பிழை என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.

*படி 2*


செயலியைத் திறந்தவுடன் நல்வரவு என்னும் திரையில் play குறியீட்டு வடிவில் இருக்கும் பொத்தானை அழுத்தவும்.

*படி 3*

திரையில் தோன்றும் வார்த்தைகளில் ஒற்று அல்லது எழுத்துப் பிழை உண்டா? இல்லையா? என்பதைத் தெரிவு செய்க.

**செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :**

*படி 1*




*படி 2*




*படி 3*




**செயல்பாட்டிற்கான உரலி**

https://play.google.com/store/apps/details?id=com.jishyut.pizhai&hl=en





6th Tamil 001-024.indd 24 23/05/18 2:58 PM

## இயல் இரண்டு

# இயற்கை



### கற்றல் நோக்கங்கள்

- இயற்கையின் சிறப்புகளை அறிதல்
- இயற்கையைப் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி விவாதித்தல்
- உழவுத் தொழிலுக்கு மழை இன்றியமையாதது என்பதை உணர்தல்
- மழை பெய்யாவிட்டால் ஏற்படும் விளைவுகளை வகுப்பறையில் விவாதித்தல்
- பறவைகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பை அறிதல்




6th Tamil 025-050.indd 25 23/05/18 3:03 PM

கவிதைப்பேழை

இயல் இரண்டு

# சிலப்பதிகாரம்




நம்மைச் சுற்றிலும் எங்குப் பார்த்தாலும் இயற்கையின் அழகு கொட்டிக் கிடக்கிறது. கடலும், மலையும், கதிரும், நிலவும், மழையும், பனியும் இயற்கையின் கொடைகள் அல்லவா? அவற்றைக் கண்டு மகிழாதவர் உண்டோ? நிலவின் குளிர்ச்சியையும் கதிரவனின் வெம்மையையும், மழையின் பயனையும் சிலப்பதிகாரம் போற்றுகிறது.


*திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்*
*கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றுஇவ்*
*அங்கண் உலகு அளித்த லான்*

*ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்*
*காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு*
*மேரு வலம் திரிதலான்*


*மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்*
*நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்*
*மேல்நின்று தான் சுரத்தலான்* *

– *இளங்கோவடிகள்*


*வான்நிலா போற்றுவோம்! வான்நிலா போற்றுவோம்!*
*மாலை அணிந்த சோழனின் குளிர்ந்த*
*வெண்குடை போல அருளை வழங்கும்*
*வான்நிலா போற்றுவோம்! வான்நிலா போற்றுவோம்!*



*கதிரவன் போற்றுவோம்! கதிரவன் போற்றுவோம்!*
*காவிரி நாடன் சோழனின் ஆணைச்*
*சக்கரம் போலவே இமயத்தை வலம்வரும்*
*கதிரவன் போற்றுவோம்! கதிரவன் போற்றுவோம்!*



*வான்மழை போற்றுவோம்! வான்மழை போற்றுவோம்!*
*கடல்சூழ் உலகுக்கு அருளைப் பொழியும்*
*மன்னனைப் போல முகில்வழி சுரக்கும்*
*வான்மழை போற்றுவோம்! வான்மழை போற்றுவோம்!*





6th Tamil 025-050.indd 26 23/05/18 3:03 PM

### சொல்லும் பொருளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங்கள் | - | நிலவு | பொற்கோட்டு | - | பொன்மயமானசிகரத்தில் |
| கொங்கு | - | மகரந்தம் | மேரு | - | இமயமலை |
| அலர் | - | மலர்தல் | நாமநீர் | - | அச்சம் தரும் கடல் |
| திகிரி | - | ஆணைச்சக்கரம் | அளி | - | கருணை |

### பாடலின் பொருள்

தேன் நிறைந்த ஆத்திமலர் மாலையை அணிந்தவன் சோழ மன்னன். அவனுடைய வெண்கொற்றக் குடை குளிர்ச்சி பொருந்தியது. அதைப் போல வெண்ணிலவும் தன் ஒளியால் உலகுக்கு இன்பம் அளிக்கிறது. அதனால் வெண்ணிலவைப் போற்றுவோம்.

காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்பவன் சோழ மன்னன். அவனது ஆணைச் சக்கரம் போல, கதிரவனும் பொன்போன்ற சிகரங்களையுடைய இமயமலையை வலப்புறமாகச் சுற்றிவருகிறது. அதனால் கதிரவனைப் போற்றுவோம்!

அச்சம்தரும் கடலை எல்லையாகக் கொண்ட உலகிற்கு மன்னன் அருள் செய்கிறான். அதுபோல, மழை, வானிலிருந்து பொழிந்து மக்களைக் காக்கிறது. அதனால் மழையைப் போற்றுவோம்!

#### நூல் வெளி



சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் சேர மன்னர் மரபைச் சேர்ந்தவர் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது. இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இதுவே தமிழின் முதல் காப்பியம். இது முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், என்றெல்லாம் போற்றப்படுகிறது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்துவதாக இந்நூல் தொடங்குகிறது.

## கற்பவை கற்றபின்

1. வளர்பிறையும் தேய்பிறையும் என்னும் தலைப்பில் பேசுக.
2. நீங்கள் விரும்பும் இயற்கைப் பொருள்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
3. "நிலா " என்னும் தலைப்பில் நான்கு அடிகளில் கவிதை படைத்திடுக.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கழுத்தில் சூடுவது ------

அ) தார் ஆ) கணையாழி இ) தண்டை ஈ) மேகலை

2. கதிரவனின் மற்றொரு பெயர் -------

அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்

3. வெண்குடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) வெண் + குடை ஆ)வெண்மை + குடை

இ) வெம் + குடை ஈ) வெம்மை + குடை

4. பொற்கோட்டு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பொன் + கோட்டு ஆ) பொற் + கோட்டு

இ) பொண் + கோட்டு ஈ) பொற்கோ + இட்டு

5. கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) கொங்குஅலர் ஆ) கொங்அலர் இ) கொங்கலர் ஈ) கொங்குலர்

6. அவன் + அளிபோல் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ)அவன்அளிபோல் ஆ) அவனளிபோல்

இ) அவன்வளிபோல் ஈ) அவனாளிபோல்

**நயம் அறிக.**

1. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக
2. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக

**குறுவினா**

1. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?
2. இயற்கை போற்றத்தக்கது ஏன்?

**சிந்தனைவினா**


இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்படக் காரணமாக எவற்றைக் கருதுகிறீர்கள்?

கவிதைப்பேழை

இயல் இரண்டு

# காணி நிலம்

7BG5IH




அடுக்ககங்களில் வாழும் பலர் இயற்கை தரும் இன்பத்தை எண்ணி ஏங்குகிறார்கள். 'வீடு' என்பது எப்படி இருக்க வேண்டும் என்று பாரதியார் கற்பனை செய்கிறார். இயற்கைச் சூழலை உருவாக்க வேண்டியதன் தேவையை உணர்த்துகிறார். இயற்கையைப் பலவகைகளிலும் போற்றிடும் பாரதியின் கனவு இல்லத்தைப் பற்றி அறிவோம்.

*காணி நிலம் வேண்டும் – பராசக்தி*
*காணி நிலம் வேண்டும் – அங்குத்*
*தூணில் அழகியதாய் – நன்மாடங்கள்*
*துய்ய நிறத்தினதாய் – அந்தக்*
*காணி நிலத்திடையே – ஓர் மாளிகை*
*கட்டித் தரவேண்டும் – அங்குக்*
*கேணி அருகினிலே – தென்னைமரம்*
*கீற்றும் இளநீரும்*
*பத்துப் பன்னிரண்டு – தென்னைமரம்*
*பக்கத்திலே வேணும் * – நல்ல*

*முத்துச் சுடர் போலே – நிலாவொளி*
*முன்பு வரவேணும் – அங்கு*
*கத்துங் குயிலோசை – சற்றே வந்து*
*காதில் படவேணும் – என்றன்*
*சித்தம் மகிழ்ந்திடவே – நன்றாய் இளம்*
*தென்றல் வரவேணும்.*

*– பாரதியார்*



## பாடலின் பொருள்

காணி அளவு நிலம் வேண்டும். அங்கு ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும். அழகான தூண்களையும் தூய நிறமுடைய மாடங்களையும் அது கொண்டிருக்கவேண்டும். நல்ல நீரையுடைய கிணறும் அங்கே இருக்க வேண்டும். இளநீரும் கீற்றும் தரும் தென்னைமரங்கள் வேண்டும்.

அங்கே முத்து போன்ற நிலவொளி வீச வேண்டும். காதுக்கு இனிய குயிலின் குரலோசை கேட்க வேண்டும். உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும்.



6th Tamil 025-050.indd 29 23/05/18 3:03 PM

## சொல்லும் பொருளும்

காணி - நில அளவைக் குறிக்கும் சொல்

மாடங்கள் - மாளிகையின் அடுக்குகள்

சித்தம் - உள்ளம்.

### நூல் வெளி



இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாரதியார். அவரது இயற்பெயர் சுப்பிரமணியன். இளமையிலேயே சிறப்பாகக் கவிபாடும் திறன் பெற்றவர். எட்டயபுர மன்னரால் பாரதி என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர். தம் கவிதையின் வழியாக விடுதலை உணர்வை ஊட்டியவர். மண் உரிமைக்காகவும் பெண் உரிமைக்காகவும் பாடியவர். நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்க பாடல்கள் பலவற்றைப் படைத்தவர். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு முதலிய பல நூல்களை இயற்றி உள்ளார்.

பாரதியார் கவிதைகள் என்னும் தொகுப்பில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. பாடலை ஓசைநயத்துடன் படித்து மகிழ்க.
2. காணி என்பது நில அளவைக் குறிக்கும் சொல். இதுபோல நிலத்தை அளக்கப் பயன்படும் சொற்களைப் பட்டியலிடுக.
3. என் கனவு இல்லம் என்னும் தலைப்பில் பேசுக.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கிணறு என்பதைக் குறிக்கும் சொல்---------

அ) ஏரி ஆ) கேணி இ) குளம் ஈ) ஆறு

2. சித்தம் என்பதன் பொருள் ----------

அ) உள்ளம் ஆ) மணம் இ) குணம் ஈ) வனம்



6th Tamil 025-050.indd 30 23/05/18 3:03 PM

3. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ---------

அ) அடுக்குகள் ஆ) கூரை இ) சாளரம் ஈ) வாயில்

4. நன்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்_____

அ) நன்+மாடங்கள் ஆ) நற் +மாடங்கள்

இ) நன்மை + மாடங்கள் ஈ) நல் + மாடங்கள்

5. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்______

அ)நிலம் + இடையே ஆ ) நிலத்தின் + இடையே

இ) ) நிலத்து + இடையே ஈ) நிலத் + திடையே

6. முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

அ) முத்துசுடர் ஆ) முச்சுடர் இ) ) முத்துடர் ஈ) முத்துச்சுடர்

7. நிலா + ஒளி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_______

அ) நிலாஒளி ஆ) நிலஒளி இ) நிலாவொளி ஈ) நிலவுஒளி

**பொருத்துக.**

1. முத்துச்சுடர்போல - மாடங்கள்
2. தூய நிறத்தில் - தென்றல்
3. சித்தம் மகிழ்ந்திட - நிலாஒளி

**நயம் அறிக.**

1. காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
2. காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

**குறுவினா**

1. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
2. பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.

**சிந்தனைவினா**

பாரதியார் வீட்டின் அருகில் தென்னை மரங்கள் வேண்டும் என்கிறார். நீங்கள் எந்தெந்த மரங்களை வளர்ப்பீர்கள் என எழுதுக.




6th Tamil 025-050.indd 31 23/05/18 3:03 PM

உரைநடை உலகம்

# இயல் இரண்டு

# சிறகின் ஓசை

7BYHM7




மனிதர்கள் பொருள் தேடுவதற்காக வேறு ஊர்களுக்குச் செல்கிறார்கள். சிலர் திரும்புகிறார்கள். சிலர் அங்கேயே தங்குகிறார்கள். மனிதர்களைப் போலவே பறவைகளும் வேறு இடங்களுக்கும் நாடுகளுக்கும் செல்கின்றன. பறவைகள் போகாத நாடுகள் இல்லை; மலைகள் இல்லை; நீர்நிலைகள் இல்லை; பறவைகளோடு கொஞ்சம் பறந்து போகலாமா!



மனிதர்கள் வெளியூர்களுக்குச் சென்று மீண்டும் தம் சொந்த ஊருக்குத் திரும்புவதை அறிவோம். அதைப் போலவே பறவைகளும் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்புகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?

பறவைகள் கண்டம்விட்டுக் கண்டம் பறக்கின்றன. அவை பெருங்கடல்களையும் மலைகளையும் கடந்து போகின்றன; குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்கின்றன. இவ்வாறு பறவைகள் இடம் பெயர்தலை **வலசை போதல்** என்பர். நீர்வாழ் பறவைகளே பெரும்பாலும் வலசை போகின்றன.

உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம் இவற்றிற்காகவே பறவைகள் இடம் பெயர்கின்றன. **நிலவு, விண்மீன், புவிஈர்ப்புப் புலம்** ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன. பொதுவாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் பறவைகள் வலசை செல்கின்றன.



பறவைகள் தங்களுக்கென ஒரு வழித்தடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பாதையிலேயே பறக்கின்றன. சில பறவை இனங்கள் அதே பாதையில் தாய்நிலங்களுக்குத் திரும்புகின்றன. சில பறவை இனங்கள் போவதற்கும் வருவதற்கும் இருவேறு பாதைகளைப் பயன்படுத்துகின்றன.

பயணம் செய்யும்போது சிலவகைப் பறவைகள் இரை, ஓய்வு போன்ற தேவைகளுக்காகத் தரை இறங்கும். இடையில் எங்கும் நிற்காமல் பறந்து, வாழிடம் சேரும் பறவைகளும் உண்டு.

**வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள்**

- தலையில் சிறகு வளர்தல்
- இறகுகளின் நிறம் மாறுதல்
- உடலில் கற்றையாக முடி வளர்தல்

ஒருவகைப் பறவை வேறுவகைப் பறவையாக உருமாறித் தோன்றும் அளவிற்குக்கூடச் சில நேரங்களில் மாற்றங்கள் ஏற்படும்.

### தெரிந்து தெளிவோம்



**கப்பல் பறவை**

சிறகடிக்காமல் கடலையும் தாண்டிப் பறக்கும் பறவை கப்பல் பறவை (Frigate bird). இது தரையிறங்காமல் 400 கிலோ மீட்டர் வரை பறக்கும். இது கப்பல் கூழைக்கடா, கடற்கொள்ளைப் பறவை என்றும் அழைக்கப்படுகிறது.

தமிழகத்திற்கு வெளிநாட்டுப் பறவைகள் வலசை வருவது பற்றி இலக்கியங்களிலும் செய்திகள் உள்ளன. ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சத்திமுத்தப்புலவர் "நாராய், நாராய், செங்கால் நாராய்" என்னும் பாடலை எழுதியுள்ளார். அப்பாடலில் உள்ள **"தென்திசைக் குமரிஆடி வடதிசைக்கு ஏகுவீர் ஆயின்"** என்னும் அடிகள் பறவைகள் வலசை வந்த செய்தியைக் குறிப்பிடுகின்றன.

ஐரோப்பாவில் இருந்து தமிழகத்திற்குச் செங்கால் நாரைகள் வருவது தற்போதைய ஆய்விலும் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. வெளிநாட்டுப் பறவைகளுக்கும் புகலிடமாகத் திகழ்கிறது தமிழ்நாடு.

தற்போது வெகுவாக அழிந்து வரும் பறவையினம் எது? உங்களுக்குத் தெரியுமா? சிட்டுக் குருவிதான் அது.

உருவத்தில் சிறிய இந்தப் பழுப்புநிறப் பறவையைப் பார்த்தவுடனே ஆண், பெண் வேறுபாட்டை உணர முடியும். ஆண்குருவியின் தொண்டைப்பகுதி கறுப்பு நிறத்தில் இருக்கும். உடல்பகுதி அடர்பழுப்பாக இருக்கும். பெண் குருவியின் உடல் முழுவதும் மங்கிய பழுப்பு நிறத்தில் இருக்கும்.



சிட்டுக்குருவி கூடுகட்டி வாழும் பறவையினத்தைச் சார்ந்தது. கூடுகட்டும் காலங்களில் சத்தமிட்டுக் கொண்டே இருக்கும். கூடுகட்டிய பின் மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும். பதினான்கு நாள்கள் அடைகாக்கும். பதினைந்தாம் நாளில் குஞ்சுகள் வெளிவரும்.



6th Tamil 025-050.indd 33 23/05/18 3:03 PM

துருவப் பகுதிகள் தவிர மனிதன் வாழும் இடங்களில் எல்லாம் சிட்டுக்குருவிகளும் வாழ்கின்றன. இந்தியா முழுவதும் சிட்டுக்குருவிகளைக் காணலாம். இமயமலைத் தொடரில் 4000 மீட்டர் உயரத்தில் கூட இவை வாழ்கின்றன.

தானியங்கள், புழுபூச்சிகள், மலர் அரும்புகள், இளந்தளிர்கள், தேன் போன்றவை சிட்டுக் குருவிகளின் உணவாகும். சிட்டுக்குருவியின் குஞ்சுகள் பெரும்பாலும் புழு, பூச்சிகளையே உட்கொள்ளும். அதனால், தாய்க்குருவி புழு பூச்சிகளைப் பிடித்துத் தம் குஞ்சுகளுக்கு ஊட்டிவிடும். சிட்டுக்குருவியின் வாழ்நாள் பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகள் ஆகும். சிட்டுக்குருவி உருவத்தில் சிறியது. ஆனாலும் வேகமாகப் பறக்கும். அதனால்தான் விரைவாகச் செல்பவனைச் சிட்டாய்ப் பறந்து விட்டான் என்று கூறுகிறோம்.

**சிட்டுக்குருவிகளின் அழிவுக்குக் காரணங்கள்**


- மனிதர்கள் விவசாயத்திற்குப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால் குருவிக் குஞ்சுகளுக்கு உணவான புழுபூச்சிகள் கிடைப்பதில்லை.
- நவீன கட்டடங்கள் குருவிகள் கூடு கட்ட ஏற்றவையாக இல்லை.
- தற்காலத்தில் தாவர வேலிகளுக்கு மாற்றாகச் செயற்கை வேலிகள் அமைக்கப்படுகின்றன. எனவே சிட்டுக்குருவிகள் வாழ உகந்த வேலித் தாவரங்கள் குறைந்துவிட்டன.
- சிட்டுக்குருவிகள் ஓய்வெடுக்கும் புதர்ச்செடிகளும் இல்லை.
- உணவுக்கும், இருப்பிடத்திற்கும் சிட்டுக்குருவிகளுடன் மற்ற பறவைகள் போட்டியிடுகின்றன.

**பறவையினங்களைக் காப்பாற்ற நாம் செய்ய வேண்டியவை**

- ஆல், அரசு போன்ற மரங்களையும் அவரை, புடலை போன்ற கொடிகளையும் வளர்க்கலாம்.
- நமது மண்ணுக்கேற்ற பிறவகை உள்ளூர்த் தாவரங்களையும் வளர்க்கலாம்.
- தோட்டங்களிலும் வயல்வெளிகளிலும் செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவற்றைத் தெளிப்பதைத் தவிர்க்கலாம்.

காக்கைகுருவி எங்கள் சாதி – என்று பாரதியார் பாடினார். சமைப்பதற்குத் தன் மனைவி வைத்திருந்த சிறிதளவு அரிசியையும் முற்றத்தில் இருந்த சிட்டுக் குருவிகளுக்கு மகிழ்வுடன் போட்டுவிட்டுப் பட்டினியாக

**இந்தியாவின் பறவை மனிதர்**



இன்றைய பறவையியல் ஆய்வாளர்களுக்கு முன்னோடி டாக்டர் சலீம் அலி. தம் வாழ்நாள் முழுவதும் பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும் அவற்றைப் படம் பிடிப்பதிலும் ஈடுபட்டார். அதனால், அவர் 'இந்தியாவின் பறவை மனிதர்' என்று அழைக்கப்படுகிறார். பறவைகள் குறித்துப் பல நூல்களை எழுதியுள்ளார். தன் வாழ்க்கை வரலாற்று நூலுக்குச் 'சிட்டுக்குருவியின் வீழ்ச்சி' (The fall of sparrow) என்று பெயரிட்டுள்ளார்.

இருந்தாராம் இவர்.

*மனிதன் இல்லாத உலகில் பறவைகள் வாழமுடியும்!*
*பறவைகள் இல்லாத உலகில் மனிதன் வாழமுடியாது!*

என்கிறார் பறவையியல் ஆய்வாளர் சலீம் அலி. இவ்வுண்மையை நாமும் உணர்ந்து இயற்கையைப் போற்றிப் பறவைகளைக் காப்போம்.

**ஆர்டிக் ஆலா.**

உலகிலேயே நெடுந்தொலைவு 22,000 கி.மீ. பயணம் செய்யும் பறவையினம்



பறவை பற்றிய படிப்பு ஆர்னித்தாலஜி (ORNITHOLOGY) எனப்படும்.

உலகச் சிட்டுக்குருவிகள் நாள் மார்ச் – 20

## கற்பவை கற்றபின்

1. உங்கள் பகுதியில் காணப்படும் பறவைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
2. உங்கள் வீட்டுக்கு அருகில் பறவைகள் வருவதற்கு என்னென்ன செய்யலாம் என்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.
3. பறவைகள் தொடர்பான பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.
4. இயற்கையைப் பாதுகாக்கும் வகையில் முழக்கத் தொடர்களை எழுதுக.
   (எ. கா.) காப்போம் காப்போம் ! பறவைகளைக் காப்போம்.!

## மதிப்பீடு

7C8SNU

உரிய சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தட்பவெப்பம் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்______.

அ) தட்பம் + வெப்பம் ஆ) தட்ப + வெப்பம்

இ) தட் + வெப்பம் ஈ) தட்பு + வெப்பம்

2. வேதியுரங்கள் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்_______.

அ) வேதி + யுரங்கள் ஆ)வேதி + உரங்கள்

இ) வேத் + உரங்கள் ஈ) வேதியு + ரங்கள்

3. தரை + இறங்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_______.

அ) தரையிறங்கும் ஆ) தரைஇறங்கும் இ) தரையுறங்கும் ஈ) தரைய்றங்கும்



6th Tamil 025-050.indd 35 23/05/18 3:04 PM

4. வழி + தடம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்_______.

அ) வழிதடம் ஆ) வழித்தடம் இ) வழிதிடம் ஈ) வழித்திடம்

5. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி_______.

அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மிக நீண்டதொலைவு பறக்கும் பறவை ------
2. பறவைகள் வலசை போவதைப் பற்றிப் பாடிய தமிழ்ப்புலவர் ------
3. பறவைகள் இடம்பெயர்வதற்கு ------ என்று பெயர்.
4. இந்தியாவின் பறவை மனிதர் ------
5. பறவைகள் வலசை போகக் காரணங்களுள் ஒன்று ------

## சொற்றொடர் அமைத்து எழுதுக.

1. வெளிநாடு_________________________________________
2. வாழ்நாள்_________________________________________
3. செயற்கை_________________________________________

## பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக.

1. மரங்களை வளர்த்து -------யைக் காப்போம் --------- உரங்களைத் தவிர்த்து நிலவளம் காப்போம். (செயற்கை / இயற்கை)
2. வலசைப் பறவைகள் வருகை தமிழகத்தில் ------------.தற்போது சிட்டுக்குருவிகள் எண்ணிக்கை------- (குறைந்துள்ளது / மிகுந்துள்ளது)

## குறுவினா

1. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?
2. வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

## சிறுவினா

1. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
2. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?

## சிந்தனைவினா


பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.

விரிவானம்

இயல் இரண்டு

# கிழவனும் கடலும்

7CHNQH




மனிதன் இயற்கையோடு போராடிக்கொண்டே இருக்கிறான். சில நேரங்களில் வெற்றி பெறுகிறான். சில நேரங்களில் தோல்வி அடைகிறான். ஆனால் முயற்சிகள் என்றும் ஓய்வதில்லை. மனிதன் இயற்கையோடு நடத்துகிற போராட்டமே அவன் வாழ்வை அமைக்கிறது. போராடுவதில் மகிழ்ச்சியும் வெற்றியும் இருக்கிறது. மீன் பிடிக்கப் போராடும் மீனவர் ஒருவரின் வாழ்வைப் பார்ப்போமா!

கிழவனும் கடலும் (The Oldman and the Sea.) என்னும் ஆங்கிலப் புதினம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு படக்கதையாக இங்குச் சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் 1954 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றது. இந்நூலின் ஆசிரியர் எர்னெஸ்ட் ஹெமிங்வே.



இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே நடக்கும் போராட்டமே இந்தக் கதை. இக்கதையின் நாயகன் சாண்டியாகோ. வயது முதிர்ந்த மீனவர் அவர். முன்பெல்லாம் கடலுக்குச் சென்றால் மீன் இல்லாமல் திரும்பமாட்டார். ஆனால், கடந்த எண்பத்து நான்கு நாள்களாக ஏனோ அவருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை. மனோலின் என்னும் சிறுவன் மீன்பிடிக்கக் கற்றுக்கொள்வதற்காக முதல் நாற்பது நாள்களும் அவருடன் கடலுக்கு வந்தான். அவன், அவருக்கு வேண்டிய உதவிகள் செய்ததோடு பேச்சுத்துணையாகவும் இருந்தான். அவரோடு கடலுக்குப் போனால் ஒரு மீனும் கிடைப்பதில்லை என்று அவனை வேறு படகிற்கு அனுப்பிவிட்டனர் அவனது பெற்றோர். இப்போதெல்லாம் தனியாகவே மீன்பிடிக்கச் செல்கிறார் சாண்டியாகோ.

அன்று எண்பத்து ஐந்தாவது நாள்...





6th Tamil 025-050.indd 37 23/05/18 3:04 PM



















6th Tamil 025-050.indd 38 23/05/18 3:04 PM







6th Tamil 025-050.indd 39 23/05/18 3:04 PM






6th Tamil 025-050.indd 40 23/05/18 3:05 PM



















6th Tamil 025-050.indd 41 23/05/18 3:05 PM










## கற்பவை கற்றபின்

கடல் காட்சி ஒன்றைப் படம் வரைந்து வண்ணம் தீட்டுக.
அப்படத்திற்குப் பொருத்தமாக நான்கு வரிகளுக்குள் குறிப்பு எழுதுக

## மதிப்பீடு

1. கிழவனும் கடலும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாகக் கூறுக.
2. இக்கதையின்வழியாக நீங்கள் உணர்ந்தவற்றை வகுப்பில் பகிர்க.
3. சாண்டியாகோ குறித்து உங்கள் கருத்து யாது?



6th Tamil 025-050.indd 42 23/05/18 3:05 PM

கற்கண்டு

இயல் இரண்டு

# முதலெழுத்தும் சார்பெழுத்தும்

7CRJS5

**எழுத்துகள் இரண்டு வகைப்படும்**

1. முதல் எழுத்து
2. சார்பு எழுத்து


**முதல் எழுத்து**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும். பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன. எனவே இவற்றை முதல் எழுத்துகள் என்பர்.

**சார்பு எழுத்துகள்**

முதல் எழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகள் சார்பெழுத்துகள். இவை பத்து வகைப்படும்.

1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலிகரம்
6. குற்றியலுகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8. ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்




இவ்வகுப்பில் உயிர்மெய், ஆய்தம் ஆகிய இரண்டு சார்பெழுத்துகள் பற்றிக் காண்போம்.

## உயிர்மெய்

- மெய் எழுத்துகளும் உயிர் எழுத்துகளும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் உயிர்மெய் எழுத்துகள் தோன்றுகின்றன.

- உயிர்மெய் எழுத்தின் ஒலிவடிவம் மெய்யும் உயிரும் சேர்ந்ததாக இருக்கும்.
- வரிவடிவம் மெய்யெழுத்தை ஒத்திருக்கும். ஒலிக்கும் கால அளவு உயிர் எழுத்தை ஒத்திருக்கும்.
- முதல் எழுத்துகளைச் சார்ந்து வருவதால் இவை சார்பெழுத்து வகையுள் அடங்கும்.

### ஆய்தம்

- மூன்று புள்ளிகளை உடைய தனித்த வடிவம் பெற்றது.
- முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.
- நுட்பமான ஒலிப்புமுறையை உடையது.
- தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
- தனித்து இயங்காது.
- முதல் எழுத்துகளாகிய உயிரையும், மெய்யையும் சார்ந்து இயங்குவதால் ஆய்த எழுத்து சார்பெழுத்து ஆகும்

## கற்பவை கற்றபின்

1. முதல் எழுத்துகள், சார்பு எழுத்துகள் தொடர்பைப் பற்றி விவாதிக்க
2. முதல் எழுத்துகள் மட்டும் இடம்பெறும் சொற்களை எழுதுக.
   (எ.கா.) ஆம்
3. முதல் எழுத்துகள் இடம்பெறாத சொற்களை எழுதுக.
   (எ.கா.) குருவி

## மதிப்பீடு

1. முதல் எழுத்துகள் என்பவை யாவை? அவை எதனால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன ?
2. சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?
3. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும்?

### சிந்தனை வினா


உயிர்மெய், ஆய்தம் இவை இரண்டும் சார்பு எழுத்துகளாகக் கூறப்படக் காரணம் தருக

வாழ்வியல்

# இயல் இரண்டு

# திருக்குறள்

7D1FTS




மக்கள் பயனுள்ள முறையில் வாழ வழிகாட்டிகளாக அமைபவை அறநூல்கள். அறநூல்களில் 'உலகப் பொது மறை' என்று போற்றப்படும் சிறப்புப் பெற்றது நம் திருக்குறள். திருக்குறளில் இல்லாத செய்திகளே இல்லை. ஏழு சொற்களில் மனிதர்களுக்கு அறத்தைக் கற்றுத்தரும் திருக்குறளைப் பயிலுவோம்; வாழ்வில் பின்பற்றுவோம்.

### கடவுள் வாழ்த்து

1) *அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு.*

அகரமே எழுத்துகளுக்குத் தொடக்கம். ஆதி பகவனே உலகுக்குத் தொடக்கம்.

### வான் சிறப்பு

2) *விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து*
*உள்நின்று உடற்றும் பசி.*

மழை உரியகாலத்தில் பெய்யாது போனால் உலகத்து உயிர்களை எல்லாம் பசி துன்புறுத்தும்.

3) *கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை.**

உரிய காலத்தில் பெய்யாது கெடுப்பதும் மழைதான். உரிய காலத்தில் பெய்து காப்பதும் மழைதான்.

### நீத்தார் பெருமை

4) *செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்.*

முடியாத செயலையும் முடித்துக் காட்டுபவர் பெரியோர்; முடியாது என்பவர் சிறியோர்.

### மக்கட்பேறு

5) *தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க்கு எல்லாம் இனிது.*

தம்மைவிடத் தம் பிள்ளைகள் அறிவுடையோர் என்றால் மக்களுக்கு அதுதான் மகிழ்ச்சி.

6) *ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்.**

தன் பிள்ளையின் புகழைக் கேட்ட தாய் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெருமகிழ்ச்சி அடைவாள்.

**அன்புடைமை**

7) *அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு.**

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் எனக்கே என்பார்கள். அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள்.

8) *அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு.*

அன்பு இருப்பதுதான் உயிருள்ள உடல். அன்பு இல்லாதது வெறும் எலும்பும் தோலும் தான்.

**இனியவை கூறல்**

9) *பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
*அணியல்ல மற்றுப் பிற.*

பணிவும் இன்சொல்லுமே ஒருவருக்கு மிகச்சிறந்த அணி.

10) *இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

இனிய சொல் இருக்கும்போது இன்னாச்சொல் பேசுவது கனி இருக்கும்போது காயை உண்பதைப் போன்றது.

## நூல் வெளி





திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர். எக்காலத்துக்கும் பொருந்தும் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறியுள்ளார். வான்புகழ் வள்ளுவர், தெய்வப்புலவர், பொய்யில் புலவர் முதலிய பல சிறப்புப் பெயர்கள் இவருக்கு உண்டு

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 குறள்பாக்களைக் கொண்டுள்ளது. "திருக்குறளில் இல்லாததும் இல்லை, சொல்லாததும் இல்லை" என்னும் வகையில் சிறந்து விளங்குகிறது. திருக்குறளுக்கு உலகப் பொதுமறை, வாயுறை வாழ்த்து முதலிய பல சிறப்புப் பெயர்கள் வழங்குகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



6th Tamil 025-050.indd 46 23/05/18 3:05 PM

## கற்பவை கற்றபின்

7DABVF

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்களுக்கு மகிழ்ச்சி தருவது ---------------------
   அ) ஊக்கமின்மை ஆ) அறிவுடைய மக்கள் இ) வன்சொல் ஈ) சிறிய செயல்
2. ஒருவர்க்குச் சிறந்த அணி ------------------
   அ) மாலை ஆ) காதணி இ) இன்சொல் ஈ) வன்சொல்

**பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. இனிய --------------------- இன்னாத கூறல்
   கனியிருப்பக் -----------கவர்ந் தற்று
2. அன்பிலார் --------------- தமக்குரியர் அன்புடையார்
   ------------- உரியர் பிறர்க்கு

**நயம் அறிக.**

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

இந்தக் குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக

**பின்வரும் செய்திக்குப் பொருத்தமான திருக்குறள் எது எனக் கண்டறிந்து எழுதுக.**

2016 ஆம் ஆண்டு ரியோ நகரில் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் கலந்துகொண்டார். உயரம் தாண்டுதல் போட்டியில் அவர் தங்கப் பதக்கம் பெற்றார். செய்தியாளர்கள் அவருடைய தாயிடம் நேர்காணல் செய்தனர். "என் மகனின் வெற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவனைப் பெற்ற பொழுதைவிட இப்போது அதிகமாக மகிழ்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

அ) செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
   செயற்கரிய செய்கலா தார்

ஆ) ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
   சான்றோன் எனக்கேட்ட தாய்

இ) இனிய உளவாக இன்னாத கூறல்
   கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

**குறுவினாக்கள்**

1. உயிருள்ள உடல் எது?
2. எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?
3. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?



6th Tamil 025-050.indd 47 23/05/18 3:05 PM

## மொழியை ஆள்வோம்!

**கேட்டும் கண்டும் அறிந்தும் மகிழ்க**

1. இயற்கை சார்ந்த பாடல்கள், கதைகள், உரைகளைக் கேட்டு மகிழ்க.
2. பறவைகள், விலங்குகளின் வாழ்க்கை முறை பற்றிய காணொலிக் காட்சிகளைக் கண்டு மகிழ்க.

**உமது ஊரின் இயற்கை வளம் பற்றிப் பேசுக.**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக**

இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே இயற்கை என்கிறோம். பனிபடர்ந்த நீலமலைகள், பாடித்திரியும் பறவைகள், தன்னிச்சையாகச் சுற்றித்திரியும் விலங்குகள், சலசலக்கும் ஓடைகள், ஆர்ப்பரித்து வீழும் அருவிகள், நீந்தும் மீன்கள், அலைவீசும் அழகிய கடல், கண்சிமிட்டும் விண்மீன்கள், தங்க ஓடமாய்த் தவழ்ந்து வரும் வெண்ணிலா இவையெல்லாம் இயற்கை நமக்குத் தந்த பரிசு.

இயற்கையின் அழகைக் கண்டு இன்புற்றால் மட்டும் போதாது. அந்த அழகை நாம் பாதுகாக்க வேண்டும். நாம் தமது தேவைக்காக மலைகள், காடுகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை அழித்து வருகிறோம். மேலும் நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தி வருகிறோம். அதனால் இயற்கைச் சமநிலை மாறி புவி வெப்பமயமாகிறது. புவி வெப்பமடையாமல் காப்பது நமது கடமை. இயற்கையைப் பாதுகாத்தால் நாம் நம்மையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

1. எதனை இயற்கை என்கிறோம்?
2. இப்பத்தியில் உள்ள இயற்கையை வருணிக்கும் சொற்கள் யாவை?
3. இயற்கையை ஏன் பாதுகாக்க வேண்டும்?
4. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

**ஆசிரியர் கூறக்கேட்டு எழுதுக.**

| | | |
|---|---|---|
| மாமழை | வான் சிறப்பு | முரல் மீன் |
| வலசை போதல் | பறவை இனங்கள் | சார்பு எழுத்துகள் |
| சாண்டியாகோ | தோற்கடிக்க முடியாது | காணிநிலம் |

## மொழியோடு விளையாடு

**திரட்டுக.**

கடல் என்னும் பொருள் தரும் வேறு சொற்களைத் திரட்டுக.



6th Tamil 025-050.indd 48 23/05/18 3:05 PM

தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக.

(எ. கா.) பல நாள்களாக மழை பெய்யாததால் பயிர்கள் வாடின.

விடை: பல நாள்களாக மழை பெய்யவில்லை. பயிர்கள் வாடின.

1. கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறார்.
2. இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.

பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப்----------- என்று பெயர். (பறவை / பரவை)
2. இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக ----------- ஆற்றினார். (உரை / உறை)
3. முத்து தம் ---------------- காரணமாக ஊருக்குச் சென்றார். (பனி / பணி)
4. கலைமகள் தன் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வருமாறு தோழியை ------------ (அலைத்தாள் / அழைத்தாள்).

பொருத்தமான சொற்களால் கட்டங்களை நிரப்புக.

1. 'புள்' என்பதன் வேறு பெயர் - | | | |
2. பறவைகள் இடம்பெயர்தல் - | | | | | | |
3. சரணாலயம் என்பதன் வேறு பெயர் - | | | | | |

வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக.

1. இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்.
2. மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது.
3. மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்
4. மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை.

கட்டங்களில் சில சொற்கள் மறைந்துள்ளன. குறிப்புகளைக் கொண்டு அவற்றைக் கண்டுபிடித்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு | த் | த | மி | ழ் | கா |
| ப் | பை | னி | மே | ம | ணி |
| ப | ல் | நி | ல | வு | நி |
| து | ட | லை | ர் | ப | ல |
| லை | க | மே | ணி | ம | ம் |
| செ | ங் | கா | ல் | நா | ரை |

1. இரட்டைக் காப்பியங்களில் ஒன்று ------------------------------------------
2. முதலெழுத்துகளின் எண்ணிக்கை ------------------------------------------
3. திங்கள் என்பதன் பொருள் ----------------------------------------------
4. சத்திமுத்தப் புலவரால் பாடப்பட்ட பறவை -----------------------------------
5. பாரதியார் -------------------------------------வேண்டும் என்று பாடுகிறார்.
6. ஆய்த எழுத்தின் வேறு பெயர் -------------------------------------------



6th Tamil 025-050.indd 49 23/05/18 3:05 PM

ஆய்ந்தறிக.

பெருகிவரும் மக்களின் தேவைக்காக இயற்கையை அழிப்பது சரியா? இயற்கையைச் சுரண்டாமல், மக்களின் தேவைகளை நிறைவேற்ற மாற்று வழிகள் உண்டா ?

கவிதை படைக்க.

கீழே காணப்படும் மழைபற்றிய கவிதையைச் சொந்தத் தொடர்களால் நிரப்புக.

வானில் இருந்து வந்திடும்
மனதில் மகிழ்ச்சி தந்திடும்
_______ _______ ____ ___
_______ _______ ____ ___
_______ _______ ____ ___

## நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

அ) சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வேன்

ஆ) இயற்கையைப் பாதுகாப்பேன்

கலைச் சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| கண்டம் - Continent | தட்பவெப்பநிலை - Climate | வானிலை - Weather |
| வலசை - Migration | புகலிடம் - Sanctuary | புவிஈர்ப்புப்புலம் - GravitationalField |

## இணையத்தில் காண்க

அழிந்து வரும் உயிரினங்கள்பற்றி இணையத்தில் தேடி அறிந்து பட்டியலிடுக.

## இணையச் செயல்பாடுகள்

### பறவைகள் வலசைபோதல்

செயல்பாட்டில் கிடைக்கப்பெறும் படம்



படிகள்:

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "globeofbirdmigration" என்னும் இணையச் செயலியின் பக்கத்திற்குச் செல்லவும். இணையச் செயலி இயங்கு நிலைக்கு வர, சற்று நேரம் ஆகும். அதுவரை காத்திருக்கவும்.
- இணையச்செயலி தயார் நிலைக்கு வந்தவுடன் ஓர் உலக உருண்டையைக் காணலாம். அதன் மையத்தில் இருக்கும் "Click to Start" என்பதைச் சொடுக்கவும். இப்போது திரையின் இடது பக்கத்தில் பறவைகளின் பெயர்ப் பட்டியல் தெரியும். அதில் ஏதேனும் ஒரு பறவையைத் தெரிவு செய்து அதன் வலசை போகும் பாதையைத் தெரிந்து கொள்ளலாம்.
- பூமி உருண்டையைச் சுழற்றுவதன் மூலம் வெவ்வேறு பறவைகளின் வலசை போதலை அறியலாம்.

செயல்பாட்டிற்கான உரலி: http://globeofbirdmigration.com/



6th Tamil 025-050.indd 50 23/05/18 3:05 PM

இயல் நான்கு

# கண்ணெனத் தகும்



## கற்றல் நோக்கங்கள்

- கல்வியின் சிறப்பையும் பயனையும் உணர்தல்
- கல்விப்பணி ஆற்றிய பெருமக்களைப் பற்றி அறிதல்
- நூலகம் பற்றித் தெரிந்து கொள்ளுதல்
- நூலகம் செல்லும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல்
- சொற்களில் எழுத்துகள் அமையும் முறையை அறிந்து பயன்படுத்துதல்

கவிதைப்பேழை

இயல் நான்கு

# மூதுரை

JVFCQI

**நுழையும்முன்**

கல்விக்கு எல்லை இல்லை. மனிதன் பிறந்தது முதல் இறுதிவரை கற்றுக்கொண்டே இருக்கிறான். கல்வி மனிதனை உயர்த்துகிறது. கல்வியும் செல்வமாகக் கருதத் தக்கது. அது பிறருக்குத் தந்தாலும் குறையாமல் வளரும். கல்வியைப் பிறரால் கைப்பற்றவோ அழிக்கவோ முடியாது. அழியாச் செல்வமாகிய கல்வியைக் கற்றவன் எங்கும் எப்போதும் சிறப்புப் பெறுவான். எனவே, நாமும் கற்போம்; வளம்பெறுவோம்.

*மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்*
*மன்னனின் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்*
*தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்*
*சென்ற இடமெல்லாம் சிறப்பு.**

*– ஔவையார்*

## சொல்லும் பொருளும்



மாசற – குறை இல்லாமல்

சீர்தூக்கின் – ஒப்பிட்டு ஆராய்ந்து

தேசம் - நாடு

## பாடலின் பொருள்

மன்னனையும் குறை இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவர். மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. கல்வி கற்றவர்க்குச் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்பு.

## நூல் வெளி



இந்நூலின் ஆசிரியர் ஔவையார். இவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள். சிறந்த அறிவுரைகளைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெயர் பெற்றது. இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன.



6th Tamil 077-205.indd 78 23/05/18 3:50 PM

## கற்பவை கற்றபின்

1. கல்வியே அழியாச் செல்வம் என்னும் தலைப்பில் பேசுக.
2. கல்வி பற்றிய பழமொழிகள் அல்லது பாடல் அடிகள் எவையேனும் இரண்டனைப் பெரியோர்களிடம் கேட்டு எழுதி வருக.

## மதிப்பீடு

JVP8S6

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மாணவர்கள் நூல்களை -------- கற்க வேண்டும்.

   அ) மேலோட்டமாக ஆ) மாசுற இ) மாசற ஈ) மயக்கமுற

2. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) இடம் + மெல்லாம் ஆ) இடம் + எல்லாம்

   இ) இட + எல்லாம் ஈ) இட + மெல்லாம்

3. மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) மாச + அற ஆ) மாசு + அற இ) மாச + உற ஈ) மாசு + உற

4. குற்றம் + இல்லாதவர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) குற்றமில்லாதவர் ஆ) குற்றம்இல்லாதவர்

   இ) குற்றமல்லாதவர் ஈ) குற்றம்அல்லாதவர்

5. சிறப்பு + உடையார் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) சிறப்புஉடையார் ஆ) சிறப்புடையார்

   இ) சிறப்படையார் ஈ) சிறப்பிடையார்

### குறுவினா

கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?

### சிறுவினா

கல்வியின் சிறப்பாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?

### சிந்தனை வினா

கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுக.




6th Tamil 077-205.indd 79 23/05/18 3:50 PM

கவிதைப்பேழை

## இயல் நான்கு

# துன்பம் வெல்லும் கல்வி




கல்வியின் அழகே அழகு என்பர் பெரியோர். கற்றபடி நிற்பதே அந்த அழகைப் பெறுவதற்கான வழி. கல்வி அறிவை வளர்ப்பதோடு பண்படுத்தவும் செய்யும். எவ்வளவுதான் கற்றிருந்தாலும் பண்பாடு இல்லாவிட்டால் அந்தக் கல்வி பயனற்றுப் போகும். பண்பட்ட மனிதரின் புகழே பல்லாண்டு நிலைத்திருக்கும். எனவே, படிப்போம்! பண்பாட்டோடு நிற்போம்! பார் போற்ற வாழ்வோம்!

JVY4TT

*ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே – நீ*
*ஏன்படித்தோம் என்பதையும் மறந்து விடாதே*
*நாட்டின் நெறிதவறி நடந்து விடாதே – நம்*
*நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே*

*மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக் கூடாது – பண்பு*
*முறைகளிலும் மொழிதனிலும் மாறக் கூடாது*
*மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக் கூடாது – தன்*
*மானமில்லாக் கோழையுடன் சேரக் கூடாது*

*துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேணும் – நீ*
*சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேணும்*
*வம்பு செய்யும் குணமிருந்தால் விட்டிட வேணும் – அறிவு*
*வளர்ச்சியிலே வான்முகட்டைத் தொட்டிட வேணும்*

*வெற்றிமேல் வெற்றிவர விருதுவர பெருமைவர*
*மேதைகள் சொன்னதுபோல் விளங்கிட வேண்டும்*
*பெற்ற தாயின் புகழும் நீ பிறந்த மண்ணின் புகழும்*
*வற்றாமல் உன்னோடு வாழ்ந்திட வேண்டும்*

*– பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்*

### சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| தூற்றும் படி | இகழும்படி | மாற்றார் | மற்றவர் |
| மூத்தோர் | பெரியோர் | நெறி | வழி |
| மேதைகள் | அறிஞர்கள் | வற்றாமல் | அழியாமல் |



6th Tamil 077-205.indd 80 23/05/18 3:50 PM

**பாடலின் பொருள்**



நாம் நூல்களைக் கற்றதோடு இருந்துவிடக்கூடாது. கற்றதன் பயனை மறக்கக் கூடாது. நம் நாட்டின் நெறி தவறி நடக்கக் கூடாது. நல்லவர்கள் குறைசொல்லும்படி வளரக் கூடாது.

பெரியோர் கூறும் அறிவுரைகளை மீறக் கூடாது. பிறரிடம் பழகும் முறையிலும் பேசும் முறையிலும் பண்புநெறி மாறக் கூடாது. பிறர் உழைப்பில் வாழக் கூடாது. தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக் கூடாது. துன்பத்தை நீக்கும் கல்வியினைக் கற்க வேண்டும். சோம்பலைப் போக்கிட வேண்டும்.

பிறருடன் வம்பு செய்யும் வழக்கம் இருந்தால் அதை விட்டுவிட வேண்டும். வானைத் தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். மேலான அறிஞர்கள் கூறிய அறிவுரைகளின்படி வாழவேண்டும். அதன்மூலம் வெற்றிகளையும் விருதுகளையும் பெருமையையும் பெறவேண்டும். பெற்ற தாயின் புகழும் நம் தாய்நாட்டின் புகழும் அழியாத வகையில் வாழவேண்டும்.

**நூல் வெளி**

எளிய தமிழில் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர். மக்கள் கவிஞர் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர்.



## கற்பவை கற்றபின்

1. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடலை இசையுடன் பாடி மகிழ்க.
2. நூலகத்திற்குச் சென்று பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய வேறு பாடல் ஒன்றை எழுதி வருக.
3. 'ஏட்டுக் கல்வி மட்டும் கல்வி இல்லை' என்னும் தலைப்பில் பேசுக.



6th Tamil 077-205.indd 81 23/05/18 3:50 PM

## மதிப்பீடு

*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

1. மாணவர் பிறர் ----- நடக்கக் கூடாது.

   அ) போற்றும்படி ஆ) தூற்றும்படி இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி

2. நாம் ----- சொல்படி நடக்க வேண்டும்.

   அ) இளையோர் ஆ) ஊரார் இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்

3. கைப்பொருள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) கையில் + பொருள் ஆ) கைப் + பொருள்

   இ) கை + பொருள் ஈ) கைப்பு + பொருள்

4. மானம் + இல்லா என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) மானம்இல்லா ஆ) மானமில்லா

   இ) மானமல்லா ஈ) மானம்மில்லா

*சொற்றொடரில் அமைத்து எழுதுக*

1. மனமாற்றம்
2. ஏட்டுக் கல்வி
3. நல்லவர்கள்
4. சோம்பல்

JH7ZVG

*குறுவினா*

1. நாம் யாருடன் சேரக் கூடாது?
2. எதை நம்பி வாழக் கூடாது?
3. இந்தப் பாடலின் முதல் இரு வரிகள் நினைவூட்டும் திருக்குறள் எது?
4. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?

*சிறுவினா*

நாம் எவ்வாறு வாழவேண்டும் எனப் பட்டுக்கோட்டையார் கூறுகிறார்?

*சிந்தனை வினா*

நீங்கள் படித்து என்னவாக விரும்புகிறீர்கள்? ஏன்?



6th Tamil 077-205.indd 82 23/05/18 3:50 PM

உரைநடை உலகம்

இயல் நான்கு

# கல்விக்கண் திறந்தவர்

நுழையும்முன்

கல்வி நிலையங்கள் காலந்தோறும் மாறி வருகின்றன. தொடக்கத்தில் ஆசிரியரின் வீட்டிலேயே தங்கி மாணவர்கள் கல்வி கற்றனர். பிறகு நாள்தோறும் ஆசிரியர் வீட்டுக்குச் சென்று கல்வி கற்றனர். அதன் பிறகு பொதுவான ஓர் இடத்தில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பித்தனர். இவையே இன்றைய பள்ளிக்கூடங்கள் ஆகும். முன்பு ஒரு சில ஊர்களில் மட்டும் பள்ளிகள் இருந்தன. இன்று பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இத்தகைய கல்விப் புரட்சிக்கு வித்திட்டவரைப் பற்றி அறிந்து கொள்வோம் வாருங்கள்.

## நிகழ்வு – 1



சிறுவர்கள் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தனர். அவ்வழியாக நான்கு சக்கர வாகனம் ஒன்று அங்கே வந்து நின்றது. அதிலிருந்து ஒருவர் கீழே இறங்கினார். ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்களைக் கூப்பிட்டு, அவர்களோடு உரையாடினார்.

"என்னடா தம்பிகளா! பள்ளிக்கூடம் போகாமல் ஆடு மேய்ச்சுக்கிட்டு இருக்கீங்க? ஏன் பள்ளிக்கூடம் விடுமுறையா? " என்று அவர் கேட்டார்.

"பள்ளிக்கூடமா? அதெல்லாம் எங்க ஊரில் கிடையாது" என்றனர் சிறுவர்கள். "அப்படியா? உங்க ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தா நீங்கள் எல்லாரும் படிப்பீங்களா?" என்று கேட்டார் அவர்.

"ஓ! படிப்போமே! " என்றனர் சிறுவர்கள்.

ஊர்தோறும் பள்ளிக்கூடங்களைத் திறக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் அவர்.

## நிகழ்வு – 2

பள்ளி விழா ஒன்றில் பங்கேற்கச் சென்றார் அவர். அப்போது மாணவர்களிடம் "படிப்பறிவு இருந்தால்தான் நாடு முன்னேற்றம் அடையும். எனவேதான் நாடு முழுக்க ஐம்பதாயிரம் பள்ளிகளைத் திறக்க முடிவு பண்ணியிருக்கோம். குழந்தைங்க நீங்க



6th Tamil 077-205.indd 83 23/05/18 3:50 PM

எவ்வளவு தூரம் நடந்து போவீங்க? நீண்ட தூரம் நடந்தால் களைச்சுப்போயிடுவீங்க. அப்புறம் எப்படிப் படிக்க முடியும்? அதனால் ஒரு மைல் தூரத்தில் ஆரம்பப்பள்ளி, மூன்று மைல் தூரத்தில் நடுநிலைப்பள்ளி, ஐந்து மைல் தூரத்தில் உயர்நிலைப்பள்ளி இருக்கணும்னு திட்டம்" என்று பேசினார்.

### நிகழ்வு – 3

பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் தேசியக் கொடி ஏற்றுமாறு அழைக்க அவரும் எழுந்தார். அனைவரும் எழுந்து நின்றனர். அப்போது ஒரு மாணவன் மயங்கிக் கீழே விழுந்தான். அனைவரும் பதற்றம் அடைந்தனர். தண்ணீர் தெளித்து அவனை எழுப்பினர்.

மயக்கம் தெளிந்த சிறுவனிடம் அவர் "காலையில் சாப்பிட்டாயா?" என்று கேட்டார். அவன் "எதுவும் சாப்பிடவில்லை" என்றான். அதற்கு அவர் "ஏன்?" என்று கேட்டார். மாணவன் "சாப்பிட எதுவும் இல்லை" என்று பதில் கூறினான். இதற்குப் பிறகு படிக்க வரும் மாணவர்களுக்கு ஒரு வேளை உணவாவது வழங்க வேண்டும் என்று முடிவு செய்தார் அவர்.

### நிகழ்வு – 4



பரமக்குடி தரைப்பாலத்தைப் பார்த்த போது உடன் வந்த கல்வி அதிகாரியிடம் பேசினார். "இந்தக் காட்டாற்றில் தண்ணீர் போகும் போது, இந்தப் பக்கத்து மாணவர்கள் எப்படிப் பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள்?" என்றார். "மழைக்காலத்தில் மாணவர்கள் பள்ளிக்கு வரமாட்டார்கள் ஐயா" என்றார் அதிகாரி. "அப்போ! இந்தப் பக்கம் ஒரு பள்ளிக்கூடம் கட்டலாமே?" என்றார் அவர். "கல்வித்துறை விதியின்படி மூன்று மைல் தூரத்திற்குள் பள்ளிக்கூடம் இருந்தால், பக்கத்தில் வேறு பள்ளிக்கு அனுமதி கிடையாதே!" என்று அதிகாரி கூறினார். அவர் முடிப்பதற்குள் "நீங்க இந்தக் காட்டாற்றைக் காரணம் காட்டுங்க. இந்தப் பக்கம் ஒரு பள்ளிக்கூடம் கட்டஅனுமதி கேளுங்க. நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றார் அவர்.

ஆடு மேய்க்கும் சிறுவர்களையும் பள்ளிக்கூடம் செல்ல வழி செய்தவர் யார் தெரியுமா?

குழந்தைகள் பள்ளி செல்வதற்காக நீண்ட தூரம் நடக்கக்கூடாது என்று எண்ணியவர் யார் தெரியுமா?

பள்ளிக்குப் படிக்க வரும் மாணவர்களுக்கு ஒருவேளை உணவாவது வழங்க வேண்டும் என்று நினைத்தவர் யார் தெரியுமா?



6th Tamil 077-205.indd 84 23/05/18 3:50 PM

கல்வித்துறை விதிகளை மாணவர்களின் நலனுக்காக மாற்றி, அவர்கள் வாழும் இடங்களிலேயே பள்ளிக்கூடங்களைத் திறக்கச் செய்த சிந்தனையாளர் யார் தெரியுமா?

அவர்தான் கல்விக் கண் திறந்தவர் என்று தந்தை பெரியாரால் மனதாரப் பாராட்டப்பட்ட மறைந்த மேனாள் முதல்வர் காமராசர் ஆவார்.

### தெரிந்து தெளிவோம்

காமராசரின் சிறப்புப் பெயர்கள்

| | |
|---|---|
| பெருந்தலைவர் | கறுப்புக் காந்தி |
| படிக்காத மேதை | ஏழைப்பங்காளர் |
| கர்மவீரர் | தலைவர்களை உருவாக்குபவர் |



### காமராசரின் கல்விப்பணிகள்

காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார். மாநிலம் முழுக்க அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். மாணவர்கள் பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார். பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப் பள்ளிச்சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார். தமிழ்நாட்டில் பல கிளைநூலகங்களைத் தொடங்கினார். மாணவர்கள் உயர்கல்வி பெறப் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கால்நடைமருத்துவக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றைப் புதிதாகத் தொடங்கினார். இவ்வாறு கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர் காமராசரே ஆவார்.

### தெரிந்து தெளிவோம்

**காமராசருக்குத் தமிழக அரசு செய்த சிறப்புகள்**

- மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டது.
- நடுவண் அரசு 1976இல் பாரதரத்னா விருது வழங்கியது.
- காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் மற்றும் விருதுநகர் இல்லம் ஆகியன அரசுடைமை ஆக்கப்பட்டு நினைவு இல்லங்களாக மாற்றப்பட்டன.
- சென்னை மெரினா கடற்கரையில் சிலை நிறுவப்பட்டது.
- சென்னையில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்குக் காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் 02.10.2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

## கற்பவை கற்றபின்

1. காமராசரின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்வு ஒன்றினை அறிந்து வந்து வகுப்பறையில் பேசுக.
2. தற்போது மாணவர்களுக்கு அரசு அளிக்கும் நலத்திட்டங்களைப் பட்டியலிடுக.

## மதிப்பீடு

JHQRYR

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடுமேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம்

   அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை ஆ) ஊரில் பள்ளிக்கூடம் இல்லை

   இ) வழி தெரியவில்லை ஈ) பேருந்து வசதியில்லை

2. பசியின்றி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) பசி + இன்றி ஆ) பசி + யின்றி இ) பசு + இன்றி ஈ) பசு + யின்றி

3. படிப்பறிவு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) படி + அறிவு ஆ) படிப்பு + அறிவு இ) படி + வறிவு ஈ) படிப்பு + வறிவு

4. காடு + ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) காட்டாறு ஆ) காடாறு இ) காட்டுஆறு ஈ) காடுஆறு

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

அ) வகுப்பு ஆ) உயர்கல்வி இ) சீருடை

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்க ------- அறிமுகப்படுத்தினார்.
2. காமராசரைக் 'கல்விக் கண் திறந்தவர்' என மனதாரப் பாராட்டியவர் ----------.

**குறு வினா**

1. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?
2. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?

**சிறு வினா**

காமராசரின் மதிய உணவுத்திட்டம் குறித்து எழுதுக.

**சிந்தனை வினா**

நீங்கள் முதலமைச்சரானால் கல்வி முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்களை வகுப்பீர்கள்?



6th Tamil 077-205.indd 86 23/05/18 3:50 PM

விரிவானம்

# இயல் நான்கு

# நூலகம் நோக்கி...

JHZN1E

**நுழையும்முன்**

"கற்றது கையளவு, கல்லாதது உலகளவு" என்பர். உலக அறிவை நாம் பெறுவதற்குப் பாடநூல்கள் மட்டும் போதாது. பல்வேறு துறை சார்ந்த நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும். அதற்குத் துணைபுரிவன நூலகங்களே ஆகும். நூலகங்கள் மாவட்ட நூலகம், கிளை நூலகம் , ஊர்ப்புற நூலகம் , பகுதி நேர நூலகம், தனியாள் நூலகம் எனப் பலவகைப்படும். ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம் நம் தமிழ்நாட்டில் உள்ளது. அதைப்பற்றி அறிந்து கொள்வோம்.




[ஆறாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் ஒரு நாள் களப்பயணமாகச் சென்னையில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு வருகின்றனர்.]

ஆசிரியர் : மாணவர்களே! இதோ, இது தான் அண்ணா நூற்றாண்டு நூலகம்.

மாணவர்கள் : ஆ! எவ்வளவு பெரிய நூலகம்!

ஆசிரியர் : ஆம், ஆசியக்கண்டத்திலேயே இரண்டாவது பெரிய நூலகம் இதுதான். தரைத் தளம் மற்றும் எட்டு அடுக்குகளைக் கொண்டது. இதன் பரப்பளவு மட்டும் எட்டு ஏக்கர். சரி! சரி! வாருங்கள். உள்ளே சென்று பார்க்கலாம்.




6th Tamil 077-205.indd 87 23/05/18 3:50 PM

[அனுமதிக் கடிதத்தை ஆசிரியர் வரவேற்பாளரிடம் கொடுக்கிறார். பிறகு நூலகப் பொறுப்பாளர் ஒருவர் நூலகத்தைச் சுற்றிக் காட்டுகிறார். அங்குச் சுவரில் ஒரு படம் மாட்டப்பட்டு உள்ளது.]

**தெரிந்து தெளிவோம்**

ஆசியா கண்டத்திலேயே மிகப் பெரிய நூலகம் **சீனா**வில் உள்ளது.



கவிதா : ஐயா, இந்தப் படத்தில் இருப்பவர் யார்?

நூலகர் : இவர்தான் முனைவர் **இரா. அரங்கநாதன்.** நூலக விதிகளை உருவாக்கியவர். இவர் **இந்திய நூலக அறிவியலின் தந்தை** என்று அழைக்கப்படுகிறார்.



பிரெய்லி நூல்

மாணவர்களே! தரைத் தளத்தில் பார்வைத் திறன் குறைபாடு உடையோருக்கான பிரிவு உள்ளது. அவர்கள் தொட்டுப் பார்த்துப் படிப்பதற்கான **பிரெய்லி** நூல்கள் உள்ளன. கேட்டு அறிய ஒலி வடிவ நூல்கள் குறுந்தகடுகள் வடிவில் உள்ளன. அவர்களுக்கு உதவி செய்யப் பணியாளர்களும் உள்ளனர். இங்கு பிரெய்லி எழுத்தில் நூல்களை உருவாக்கும் கருவியும் உள்ளது. படியெடுக்கும் வசதியும் உண்டு.

கணியன் : என் பக்கத்து வீட்டு அண்ணாவிற்குப் பார்வைக் குறைபாடு இருந்தும் பட்டப்படிப்பு முடித்துள்ளார். அவருக்கு இது மிகவும் பயன்படும். அவரிடம் இந்தத் தகவலைக் கூறப் போகிறேன்.

நூலகர் : இதோ **நகரும் படிக்கட்டு.** இதில் ஏறி நாம் முதல் தளத்திற்குச் சொல்வோம் வாருங்கள். இந்த முதல் தளம் குழந்தைகளுக்காகச் சிறப்பாக உருவாக்கப் பட்ட பகுதி. குழந்தைகள் மகிழ்ச்சியான சூழலில் படிப்பதற்காகச் செயற்கை மரம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது.





6th Tamil 077-205.indd 88 23/05/18 3:50 PM



சிறுவர்கள் மட்டுமல்ல அனைவரின் மனத்தையும் கொள்ளைகொள்ளும் பகுதி இது. இங்கு இருபது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்லூடகக் குறுந்தகடுகள் குழந்தைகளுக்காகச் சேகரித்து வைக்கப்பட்டு உள்ளன. பிற நாடுகளில் இருந்து திரட்டப்பட்ட ஐம்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இங்கு உள்ளன.

(குழந்தைகள் பிரிவில் அமைக்கப்பட்டிருந்த நூல் அடுக்குகளையும் விளையாடும் இடத்தையும் மாணவர்கள் பார்த்து மகிழ்ந்தனர். அங்குக் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இருந்த புத்தகங்களை ஆவலுடன் கையில் எடுத்து மகிழ்ச்சியுடன் பார்த்தனர். அப்பிரிவை விட்டுப் பிரிய மனமில்லாமல் மாணவர்கள் நகர்ந்தனர்.)

இனியா : இந்த ஒரு தளத்தைப் பார்க்கவே இன்று ஒரு நாள் போதாது போலிருக்கிறதே!.

கவிதா : ஆம் இனியா, நீ கூறுவது சரிதான்.

(ஒவ்வொரு தளமாகப் பார்த்தபடி சென்று ஏழாம் தளத்தை அடைகின்றனர்.)

நூலகர் : இதுதான் ஏழாம் தளம். இங்குப் பழமையான ஓலைச் சுவடிகள் சேகரித்துப் பாதுகாத்து வைக்கப்பட்டு உள்ளன. இதே தளத்தில் வரலாறு, புவியியல், சுற்றுலா நூல்களும் உள்ளன.

இங்கு அனைத்துவகைப் போட்டித் தேர்வுகளுக்கும் தேவையான நூல்கள் உள்ளன. மின் நூலகமும் உள்ளது. அனைத்துத் துறை சார்ந்த தரமான மின்நூல்களும் மின் இதழ்களும் உள்ளன.

**தெரிந்து தெளிவோம்** **அண்ணா நூலகத்தின் எட்டுத் தளங்கள்**

தரைத்தளம் – சொந்த நூல் படிப்பகம், பிரெய்லி நூல்கள்

முதல் தளம் – குழந்தைகள் பிரிவு, பருவ இதழ்கள்

இரண்டாம் தளம் – தமிழ் நூல்கள்

மூன்றாம் தளம் – கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள்

நான்காம் தளம் – பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி

ஐந்தாம் தளம் – கணிதம், அறிவியல், மருத்துவம்

ஆறாம் தளம் – பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை

ஏழாம் தளம் – வரலாறு, சுற்றுலா

எட்டாம் தளம் – நூலகத்தின் நிர்வாகப் பிரிவு



6th Tamil 077-205.indd 89 23/05/18 3:50 PM

மாதவி : ஐயா, இங்குள்ள புத்தகங்களை நாம் வீட்டிற்கு எடுத்துச் செல்ல முடியுமா?

ஆசிரியர் : முடியாது மாதவி. இங்கேயே அமர்ந்துதான் படிக்க வேண்டும்.

> **தெரிந்து தெளிவோம்**
>
> **நூலகத்தில் படித்து உயர்நிலை அடைந்தவர்களுள் சிலர்**
>
> அறிஞர் அண்ணா, ஜவஹர்லால் நேரு
> அண்ணல் அம்பேத்கர், காரல் மார்க்ஸ்

பாத்திமா : இந்த நூலகத்தில் எங்கும் 'குளு குளு' வென உள்ளதே!

நூலகர் : ஆமாம். நூலகம் முழுவதுமே குளிர்பதன வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இதே வசதியுடன் கூட்ட அரங்கு, கலையரங்கு, கருத்தரங்கக் கூடம், கண்காட்சி அரங்கு போன்றவையும் உள்ளன.

பீட்டர் : ஆகா, இத்தனை வசதிகள் நூலகத்தில் உள்ளனவா? நன்றி ஐயா. எங்கள் ஊரில் நூலகம் இல்லையே? நான் என்ன செய்வது?

ஆசிரியர் : அதற்குத்தான் தமிழக அரசு நடமாடும் நூலகம் என்னும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

பீட்டர் : அப்படியானால் அதை நான் பயன்படுத்துவேன் ஐயா.

மாணவர்கள் : இனி எங்கள் வீட்டின் அருகிலுள்ள கிளை நூலகத்தையும் தவறாமல் பயன்படுத்துவோம் ஐயா.

ஆசிரியர் : எங்களுக்கு இனிய முறையில் வழிகாட்டியாக இருந்த நூலகப் பொறுப்பாளர்களுக்கு மிக்க நன்றி. மாணவர்களே மகிழ்ச்சிதானே! வாருங்கள் புறப்படலாம்.

> **தெரிந்து தெளிவோம்**
>
> சிறந்த நூலகர்களுக்கு டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது வழங்கப்படுகிறது.

## கற்பவை கற்றபின்

1. நூலகங்களில் உள்ள புத்தகங்களில் உங்களுக்குப் பிடித்தமான நூல்களைப் பட்டியலிடுக.
2. நீங்கள் விரும்பிப் படித்த நூல் குறித்து நண்பனுடன் உரையாடுக.

JX9J32

## மதிப்பீடு

அண்ணா நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

கற்கண்டு

இயல் நான்கு

# இன எழுத்துகள்

JXIF4P

சில எழுத்துக்களுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும். ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.




(எ.கா.) திங்கள், மஞ்சள், மண்டபம், சந்தனம், அம்பு, தென்றல்




இடையின எழுத்துகள் ஆறும் (ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாகும்.






6th Tamil 077-205.indd 91 23/05/18 3:50 PM

மெய்யெழுத்துகளைப் போலவே உயிர் எழுத்துகளிலும் இன எழுத்துகள் உண்டு. உயிர் எழுத்துகளில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துகள் ஆகும். குறில் எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு இ என்பது இன எழுத்தாகும். ஔ என்னும் எழுத்துக்கு உ என்பது இன எழுத்தாகும். சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

(எ. கா.) ஓஒதல், தூஉம், தழீஇ

தமிழ் எழுத்துகளில் ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.

## கற்பவை கற்றபின்

தங்கப் பாப்பா வந்தாளே!
சிங்கப் பொம்மை தந்தாளே!
பஞ்சு போன்ற கையாலே!
பண்டம் கொண்டு வந்தாளே!
பந்தல் முன்பு நின்றாளே!
கம்பம் சுற்றி வந்தாளே!
தென்றல் காற்றும் வந்ததே!
தெவிட்டா இன்பம் தந்ததே!

இப்பாடலில் இடம்பெற்றுள்ள இன எழுத்துச் சொற்களை எடுத்து எழுதுக.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?

   அ) மஞ்சள் ஆ) வந்தான் இ) கல்வி ஈ) தம்பி

2. தவறான சொல்லை வட்டமிடுக.

   அ) கண்டான் ஆ) வென்ராான் இ) நண்டு ஈ) வண்டு

பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக. பிழைக்கான காரணம் தருக.

| பிழையான சொல் | திருத்தம் |
|---|---|
| தெண்றல் | ---------- |
| கன்டம் | ---------- |
| நன்ரி | ---------- |
| மன்டபம் | ---------- |

JXSB6C

சிறுவினா

இன எழுத்துகள் என்றால் என்ன?



6th Tamil 077-205.indd 92 23/05/18 3:50 PM

## மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க

*யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாத வாறு.*

*– குறள்*

*ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்*
*நாற்றிசையும் செல்லாத நாடுஇல்லை அந்நாடு*
*வேற்றுநாடு ஆகா தமவேஆம் ஆயினால்*
*ஆற்றுஉணா வேண்டுவது இல்.*

*– பழமொழி நானூறு*

தொடர்களை நீட்டித்துப் புதிய தொடர்களை உருவாக்குங்கள்.

(எ.கா.)

| | |
|---|---|
| பாடம் படித்தான். | மழை பெய்தது. |
| வகுப்பில் பாடம் படித்தான். | ---- ---- --- |
| தமிழ் வகுப்பில் பாடம் படித்தான். | ---- ---- ---- ---- |
| நேற்று தமிழ் வகுப்பில் பாடம் படித்தான். | ---- ---- ---- ---- ---- |
| அவன் நேற்று தமிழ் வகுப்பில் பாடம் படித்தான். | ----- ---- ---- ---- ---- ---- |

இரு பொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்கள் அமையுங்கள்.

(நூல், மாலை, ஆறு, படி)

(எ. கா.) ஆடை தைக்க உதவுவது நூல்
மூதுரை அற நூல்

பின்வரும் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குங்கள்.

| | | |
|---|---|---|
| ஆசிரியர்<br>மாணவன் | கவிதை<br>பாடம் | எழுதுகிறார்<br>எழுதுகிறான்<br>படிக்கிறார்<br>படிக்கிறான்<br>கற்பிக்கிறார் |



6th Tamil 077-205.indd 93 23/05/18 3:50 PM

## உரையாடலை நிறைவு செய்யுங்கள்.

மாணவர் : வணக்கம் ஐயா.

தலைமை ஆசிரியர் : வணக்கம் மதி உனக்கு என்ன வேண்டும்?

மாணவர் : எனக்கு மாற்றுச் சான்றிதழ் வேண்டும் ஐயா.

தலைமை ஆசிரியர் : ------------------------------------

மாணவர் : என் தந்தைக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது ஐயா.

தலைமை ஆசிரியர் : அப்படியா! எந்த ஊருக்குப் பணி மாறுதல் கிடைத்திருக்கிறது?

மாணவர் : ------------------------------------

தலைமை ஆசிரியர் : அங்கு எந்தப் பள்ளியில் சேரப் போகிறாய்?

மாணவர் : ------------------------------------

தலைமை ஆசிரியர் : ------------------------------------

மாணவர் : என் அப்பாவை அழைத்து வந்திருக்கிறேன் ஐயா.

## கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைவர்களின் பிறந்த நாள் எந்த நாளாகக் கொண்டாடப் படுகிறது.

(குழந்தைகள் தினம், மாணவர் தினம், ஆசிரியர் தினம், தேசிய இளைஞர் தினம், கல்வி வளர்ச்சி நாள்)

1. காமராசர் பிறந்த நாள் ----------------------------------
2. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் பிறந்தநாள் ------------------------------
3. அப்துல்கலாம் பிறந்த நாள் ------------------------
4. விவேகானந்தர் பிறந்த நாள் ------------------------------
5. ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் --------------------------------

## இன எழுத்துகள் அமைந்துள்ள சொற்களை வட்டமிடுங்கள்.

கங்கை, பக்கம், வண்டு, மண்டபம், மங்கை,

வெந்தயம், தந்தம், பஞ்சு, பச்சை, தக்காளி, மஞ்சள்,

கம்பளம், குன்று, காக்கை, செங்கடல், தேங்காய்



6th Tamil 077-205.indd 94 23/05/18 3:50 PM

கீழ்க்காணும் சொற்களுள் அமைந்துள்ள இன எழுத்துகளை எடுத்து எழுதுங்கள்.

சங்கு, நுங்கு, பிஞ்சு, வஞ்சம், பட்டணம், சுண்டல், வண்டி,

பந்தயம், பந்து, கற்கண்டு, தென்றல், நன்று

பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும்.

காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களைத் தடுப்பதைக் காமராசர் கவனித்தார். உடனே அவர்களை உள்ளே அழைத்தார். "யாரைப் பார்க்க வந்தீங்க?" என்று அன்புடன் வினவினார். "எங்க அண்ணனுக்குத் தேர்வுக்குப் பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லே. உங்களைப் பார்த்தால்..." என்று சிறுமி கூறி முடிப்பதற்குள், "அம்மா அனுப்பி விட்டாரா?" என்று காமராசர் கேட்டார். "இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாகக் கொண்டு போய் வித்துட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுதான் எங்களைப் படிக்க வைக்கிறாங்க" என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்.

மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். "ஐயா தேர்வுக்குப் பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை (பற்றுச் சீட்டை) அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றனர். அதனைக் கேட்டுக் காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

1. காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள் -------

அ) பெற்றோர் ஆ) சிறுவன், சிறுமி இ) மக்கள் ஈ) ஆசிரியர்கள்

2. இந்நிகழ்வு சிறுவனது குடும்பத்தின் எப்பண்பை விளக்குகிறது?

அ) ஏழ்மை ஆ) நேர்மை இ) உழைப்பு ஈ) கல்லாமை

3. மறுநாள் குழந்தைகள் வந்ததும் காமராசர் மனம் -------

4. சிறுவனும் சிறுமியும் எதற்காகக் காமராசரின் வீட்டிற்கு வந்தனர்?

5. காமராசர் செய்த உதவி யாது?

கட்டுரை எழுதுக

காமராசர் என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை

இளமைக் காலம்

கல்விப் பணி

நிறைவேற்றிய பிற திட்டங்கள்

முடிவுரை

## மொழியோடு விளையாடு

'கல்விக்கண் திறந்த காமராசர்' இத்தொடரிலுள்ள எழுத்துகளை மட்டும் பயன்படுத்தி புதிய சொற்களை உருவாக்குங்கள். (எ.கா.) கண்

------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------

முறை மாறியுள்ள சொற்களைச் சரியான இடத்தில் பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க.

1. முளையிலே விளையும் தெரியும் பயிர்
2. ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை

கீழ்க்காணும் கட்டங்களில் உள்ள இன எழுத்துச் சொற்களை வட்டமிட்டுத் தனியாக எடுத்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ண் | ட | ப | ம் | அ |
| ற | தி | க | ந் | கி | ச |
| கி | பி | ம் | து | ளி | ங் |
| தெ | ன் | ற | ல் | ங் | கு |
| ள் | வி | ம | ஞ் | ச | ள் |

செயல் திட்டம்

காமராசர் குறித்த செய்திகள் மற்றும் புகைப்படங்களுடன் ஒரு படத்தொகுப்பு (Album) உருவாக்கவும்.

## நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்

1. கல்வியின் சிறப்பை உணர்ந்துள்ளேன்.
2. தொடர்ந்து கல்வி கற்பேன்.
3. கல்வியால் எனது இலட்சியத்தை அடைவேன்.
4. கல்வியால் சிறந்தவர்களை என் முன்னோடிகளாகக் கொள்வேன்.
5. புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வேன்.



6th Tamil 077-205.indd 96 23/05/18 3:50 PM

## கலைச்சொல் அறிவோம்

| | | |
|---|---|---|
| கல்வி | - | *Education* |
| தொடக்கப் பள்ளி | - | *Primary School* |
| மேல்நிலைப் பள்ளி | - | *Higher Secondary School* |
| நூலகம் | - | *Library* |
| மின்படிக்கட்டு | - | *Escalator* |
| மின்தூக்கி | - | *Lift* |
| மின்னஞ்சல் | - | *E - Mail* |
| குறுந்தகடு | - | *Compact Disk (CD)* |
| மின்நூலகம் | - | *E – Library* |
| மின்நூல் | - | *E - Books* |
| மின் இதழ்கள் | - | *E – Magazine* |

## இணையத்தில் காண்க

1. ஔவையார் என்ற பெயரில் பலர் இருந்திருக்கின்றனர் என்ற செய்தியை இணையத்தில் தேடுக.
2. கல்வியின் சிறப்புக் குறித்துக் கூறியுள்ள கல்வியாளர்கள் சிலரின் பெயர்களை இணையத்தில் தேடிப் பட்டியலிடுக.
3. கல்வியால் உயர்ந்தோரின் பெயர்களை இணையத்தில் தேடிப் பட்டியலிடுக.
4. கல்வியின் சிறப்புக் கூறும் மேற்கோள்களை இணையத்தில் தேடிப் பயில்க.
5. உலகப் புகழ்பெற்ற புத்தகத் திருவிழாக்கள் குறித்து இணையத்தில் தேடி எழுதுக.



6th Tamil 077-205.indd 97 23/05/18 3:50 PM

## இணையச் செயல்பாடுகள்

விளையாடி
பார்ப்போமா...
*Digitaldialects*




படிகள்:

⇒ கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி **Digital Dialects** என்னும் இணையச் செயலியின் பக்கத்திற்குச் செல்லவும். அங்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மொழிகளில் தமிழைத் தேர்வு செய்து கொள்ளவும் .

⇒ இப்போது திரையில் Tamil Alphabet, Numbers, Fruit & Vegetables, Colors , Animals போன்ற தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதில் விரும்பும் தெரிவைத் தேர்ந்தெடுக்கவும்.

⇒ உதாரணத்திற்கு Animals என்பதைத் தெரிவு செய்தவுடன் விலங்குகளின் பெயர்கள் அடங்கிய கட்டம் தோன்றும். அதன் கீழே இருக்கும் play game என்பதைச் சொடுக்கியதும் விளையாடுவதற்கான அறிவுரைக் கட்டம் தோன்றும். அதன் கீழே இருக்கும் play game என்பதை மீண்டும் சொடுக்கி விளையாட்டைத் தொடரவும்.









செயல்பாட்டிற்கான உரலி

*http://www.digitaldialects.com/*

*கொடுக்கப்பட்டுள்ள படங்கள்அடையாளத்திற்காக மட்டுமே



6th Tamil 077-205.indd 98 23/05/18 3:50 PM

# இயல் ஐந்து

# பாடறிந்து ஒழுகுதல்



## கற்றல் நோக்கங்கள்

- நல்லொழுக்கப் பண்புகளை அறிதல்
- தமிழர் திருநாளின் சிறப்பை உணர்தல்
- தமிழரின் சிற்பக்கலைச் சிறப்பையும் பிற கலைகளையும் அறிதல்
- நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் வெளிப்படும் நாகரிகம், பண்பாட்டினை அறிதல்
- மயங்கொலி வேறுபாடு அறிந்து மொழியைச் சரியாகப் பயன்படுத்துதல்

JY277Z




6th Tamil 077-205.indd 99 23/05/18 3:50 PM

கவிதைப்பேழை

இயல் ஐந்து

# ஆசாரக்கோவை




நல்லொழுக்கமே நல்ல மனிதர்களை உருவாக்கும். நாம் ஒழுக்க நெறிகளை அறிந்தால்தான் அவற்றைப் பின்பற்றி நல்வாழ்வு வாழ முடியும். இந்த நோக்கத்திற்காகவே நம் முன்னோர் அற நூல்களைப் படைத்தனர். நாம் பின்பற்ற வேண்டிய நற்பண்புகளை அறநூல்கள் விளக்குகின்றன. அவற்றை அறிவோம் வாருங்கள்.

JZ8YSB

*நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு*
*இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு*
*ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை*
*நல்லினத் தாரோடு நட்டல் – இவையெட்டும்*
*சொல்லிய ஆசார வித்து*

– பெருவாயின் முள்ளியார்

## சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| நன்றியறிதல் | – | பிறர் செய்த உதவியை மறவாமை |
| ஒப்புரவு | - | பிறருக்கு உதவி செய்தல் |
| நட்டல் | - | நட்புக் கொள்ளுதல் |

## பாடலின் பொருள்

பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்; பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்; இனிய சொற்களைப் பேசுதல்; எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்; கல்வி அறிவு பெறுதல்; பிறருக்கு உதவுதல்; அறிவுடையவராய் இருத்தல்; நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் ஆகிய எட்டும் நல்லொழுக்கத்தை விதைக்கும் விதைகள் ஆகும்.



## நூல் வெளி

ஆசாரக்கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். இவர் பிறந்த ஊர் கயத்தூர். ஆசாரக்கோவை என்பதற்கு நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு என்பது பொருள். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது.



6th Tamil 077-205.indd 100 23/05/18 3:50 PM

## கற்பவை கற்றபின்

1. நாம் எந்தெந்த வகையில் பிறருக்கு உதவலாம் என்பது குறித்து நண்பர்களுடன் கலந்துரையாடுக.
2. இந்தப் பாடலில் கூறப்படும் கருத்துகளுக்குப் பொருத்தமான திருக்குறள் அதிகாரங்களின் தலைப்புகளைப் பட்டியலிடுக.
3. "கூடா நட்புக் கேடாய் முடியும்" என்னும் கருத்து அமைந்த கதை ஒன்று கூறுக.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பிறரிடம் நான் --------- பேசுவேன்.

   அ) கடுஞ்சொல்  ஆ) இன்சொல்  இ) வன்சொல்  ஈ) கொடுஞ்சொல்

2. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்வது -------- ஆகும்.

   அ) வம்பு  ஆ) அமைதி  இ) அடக்கம்  ஈ) பொறை

3. அறிவு+உடைமை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் --------

   அ) அறிவுடைமை  ஆ) அறிவுஉடைமை

   இ) அறியுடைமை  ஈ) அறிஉடைமை

4. இவை+எட்டும் என்பதனைச் சேர்த்து எழுதக்கிடைக்கும் சொல் --------

   அ) இவைஎட்டும்  ஆ) இவையெட்டும்  இ) இவ்வெட்டும்  ஈ) இவ்எட்டும்

5. நன்றியறிதல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ----------

   அ) நன்றி+யறிதல்  ஆ) நன்றி+அறிதல்  இ) நன்று+அறிதல்  ஈ) நன்று+யறிதல்

6. பொறையுடைமை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது --------

   அ) பொறுமை+உடைமை  ஆ) பொறை+யுடைமை

   இ) பொறு+யுடைமை  ஈ) பொறை+உடைமை

குறுவினா

1. எந்த உயிருக்கும் செய்யக்கூடாதது எது?
2. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?

JZHUTY

சிறுவினா

ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

சிந்தனை வினா

1. உங்கள் நண்பரிடம் உங்களுக்குப் பிடித்த பண்புகளைப் பட்டியலிடுக.
2. நல்ல ஒழுக்கங்களை வித்து எனக் கூறுவதின் காரணத்தைச் சிந்தித்து எழுதுக.



6th Tamil 077-205.indd 101 23/05/18 3:50 PM

கவிதைப்பேழை

# இயல் ஐந்து

# கண்மணியே கண்ணுறங்கு

**நுழையும்முன்**

பாடல்கள் மனத்திற்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. பாடலைப் பாடினாலும் மகிழ்ச்சி கேட்டாலும் மகிழ்ச்சி. ஏட்டில் எழுதப்படாத இசைப்பாடல்கள் தமிழில் ஏராளமாக உள்ளன. தமிழரின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்விலும் பாடல்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இந்நாட்டுப்புறப் பாடல்களே தமிழர்களின் வாழ்க்கை முறைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.



ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

நந்தவனம் கண் திறந்து
நற்றமிழ்ப் பூ எடுத்து
பண்ணோடு பாட்டிசைத்து
பார் போற்ற வந்தாயோ!

தந்தத்திலே தொட்டில் கட்டி
தங்கத்திலே பூ இழைத்து
செல்லமாய் வந்து உதித்த
சேரநாட்டு முத்தேனோ!

வாழை இலை பரப்பி
வந்தாரைக் கை அமர்த்தி
சுவையான விருந்து வைக்கும்
சோழநாட்டு முக்கனியோ

குளிக்கக் குளம் வெட்டி
குலம்வாழ அணை கட்டி
பசியைப் போக்க வந்த
பாண்டிநாட்டு முத்தமிழோ!

கண்ணே கண்மணியே
கண்ணுறங்கு கண்ணுறங்கு

JZRQVL

### சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| நந்தவனம் | பூஞ்சோலை | பண் | இசை |
| பார் | உலகம் | இழைத்து | செய்து |

### தொகைச்சொற்களின் விளக்கம்

முத்தேன் – கொம்புத்தேன், பொந்துத்தேன், கொசுத்தேன்

முக்கனி – மா, பலா, வாழை

முத்தமிழ் – இயல், இசை, நாடகம்

### பாடலின் பொருள்

தமிழ்ச் சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடி உலகம் புகழ வந்தாயோ! தங்கப் பூ பதித்த தந்தத்தால் ஆன தொட்டிலில் செல்லமாய் உறங்க வந்த சேரநாட்டின் முத்தேனோ! இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்கும் சோழ நாட்டின் முக்கனியோ! குளம் வெட்டி, அணைக் கட்டிக் குடிமக்களின் பசியைப் போக்கும் பாண்டி நாட்டின் முத்தமிழோ! கண்ணே கண்மணியே கண்மூடி உறங்குவாயாக.

#### நூல் வெளி

தாலாட்டு வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்று. தால் என்பதற்கு நாக்கு என்று பொருள். நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு (தால்+ஆட்டு) என்று பெயர்பெற்றது. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் இனிய ஓசையுடன் பாடும் பாடல் தாலாட்டு.

## கற்பவை கற்றபின்

1. உங்கள் பகுதியில் பாடப்படும் தாலாட்டுப்பாடல் ஒன்றை அறிந்து வந்து பாடுக.
2. உங்கள் பகுதியில் பேசப்படும் பழமொழிகளைத் தொகுக்க.

# மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பாட்டிசைத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………..

   அ) பாட்டி+சைத்து ஆ) பாட்டி+இசைத்து

   இ) பாட்டு+இசைத்து ஈ) பாட்டு+சைத்து

2. கண்ணுறங்கு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………

   அ) கண்+உறங்கு ஆ) கண்ணு+உறங்கு

   இ) கண்+றங்கு ஈ) கண்ணு+றங்கு

3. வாழை+இலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………

   அ) வாழையிலை ஆ)வாழைஇலை

   இ) வாழைலை ஈ)வாழிலை

4. கை+அமர்த்தி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ……………..

   அ) கைமர்த்தி ஆ) கைஅமர்த்தி

   இ) கையமர்த்தி ஈ) கையைமர்த்தி

5. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் ………………

   அ) மறைந்த ஆ) நிறைந்த

   இ) குறைந்த ஈ) தோன்றிய

K11LX9

**குறுவினா**

1. இப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?
2. நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப்புறப் பாடல் கூறுவது யாது?

**சிறுவினா**

தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?

**சிந்தனை வினா**

1. வாய்மொழி இலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுக்க.
2. குழந்தைகளைக் கொஞ்சுவதற்குப் பயன்படுத்தப்படும் சொற்களைத் தொகுக்க.



6th Tamil 077-205.indd 104 23/05/18 3:50 PM

உரைநடை உலகம்

# இயல் ஐந்து

# தமிழர் பெருவிழா

K1AHYH

**நுழையும்முன்**

உறவுகள் ஒன்றுகூடிக் கொண்டாடும் விழாக்கள் மனத்திற்கு மகிழ்வைத்தரும்; மனிதரிடையே ஒற்றுமையை வளர்க்கும். தமிழரின் நாகரிகம், வீரம் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் வகையில் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. விழாக்கள் நமது பண்பாட்டை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கின்றன. தமிழருக்கே உரிய சிறப்பான விழாவைப் பற்றி அறிவோம் வாருங்கள்.



இயற்கையோடு இணைந்து வாழ்வதே தமிழரின் வாழ்க்கைமுறை ஆகும். இயற்கையைக் கடவுளாக வணங்குதல் தமிழர் மரபு. தமிழர் கொண்டாடும் பல விழாக்கள் இயற்கையைப் போற்றும் வகையிலேயே அமைந்து இருக்கின்றன. அவற்றுள் சிறப்பானது பொங்கல் விழா ஆகும். இது தமிழர் திருநாள் என்றும் போற்றப்படுகிறது.

கதிரவனுக்கு நன்றி கூறிச் சிறப்புச் செய்யும் விழா பொங்கல் விழா. உழவர்கள் ஆடித்திங்களில் விதைப்பர். தைத்திங்களில் அறுவடை செய்து பயன் அடைவர். தைத்திங்களின் முதல் நாளில் பொங்கலிட்டு வழிபடுவர். எனவே, இத்திருவிழாவை



6th Tamil 077-205.indd 105 23/05/18 3:50 PM

அறுவடைத்திருவிழா என்றும் அழைப்பர். அந்தச் சமயத்தில் இயற்கை அன்னை பசுமையான ஆடை உடுத்தி, பல நிறப் பூக்களைச் சூடி இருப்பாள். காயும் கனியும் கரும்பும் எங்குப் பார்த்தாலும் விளைந்து காட்சி தரும்.

உழவர்கள் இயற்கைக்கும் தம்முடன் உழைத்த கால்நடைகளுக்கும் இந்நாளில் நன்றி தெரிவித்து மகிழ்கின்றனர். எனவே, இவ்விழாவை உழவர் திருநாள் என்றும் கூறுவர். பொங்கல் திருநாள் இரண்டு நாள்கள் முதல் நான்கு நாள்கள் வரை கொண்டாடப்படுகிறது. இது வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபடுகிறது.

### போகித்திருநாள்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பது ஆன்றோர் மொழி. வீட்டில் உள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்யும் நாள் போகித் திருநாள். இது மார்கழி மாதத்தின் இறுதி நாள் ஆகும்.

**தெரிந்து தெளிவோம்**

வாழ்க்கைக்கு வளம் தரும் மழைக்கடவுளை வழிபடும் நோக்கில் அக்காலத்தில் போகிப்பண்டிகை இந்திரவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

### பொங்கல் திருநாள்

தை மாதத்தின் முதல்நாள் பொங்கல் திருநாள் ஆகும். இத்திருநாளன்று வாசலில் வண்ணக் கோலமிடுவர். மாவிலைத் தோரணம் கட்டுவர். புதுப்பானையில் புத்தரிசியோடு வெல்லம், முந்திரி, நெய் சேர்த்துப் பொங்கலிடுவர். பொங்கல் என்பதற்குப் பொங்கிப்பெருகி வருவது என்று பொருள். பொங்கல் பொங்கி வரும் வேளையில் "பொங்கலோ பொங்கல்" என்று மங்கல ஒலி எழுப்பிப் போற்றுவர். "பொங்கல் பொங்கி வருவதுபோல் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கிப் பெருகும்" என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். பின்னர்த் தலைவாழை இலையிட்டுப் பொங்கலைப் படைப்பர். கரும்பு, மஞ்சள் கொத்து, தேங்காய், பழங்கள், வெற்றிலை பாக்கு ஆகியவற்றை வைத்து வழிபடுவர். விளைச்சலுக்குக் காரணமான கதிரவனை நன்றியோடு வணங்கி மகிழ்வர். சர்க்கரைப் பொங்கலை அனைவருக்கும் அளித்துத் தாமும் உண்டு மகிழ்வர்.

**தெரிந்து தெளிவோம்**

தை முதல் நாளில் திருவள்ளுவராண்டு தொடங்குகிறது. தை இரண்டாம் நாள் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்படுகிறது

### மாட்டுப் பொங்கல்

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல். மாடுகள் உழவர்களின் செல்வமாக மதிக்கப்படுகின்றன. மாடு என்ற சொல்லுக்குச் செல்வம் என்னும் பொருளும் உண்டு. உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குகின்றன. அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.



மாட்டுப் பொங்கலன்று மாடுகளை நீராட்டுவர். கொம்புகளைச் சீவி வண்ணங்கள் தீட்டுவர். மாடுகளின்



6th Tamil 077-205.indd 106 23/05/18 3:50 PM

கழுத்திலே மணிகளைக் கட்டுவர். பூவும் தழையும் சூட்டுவர். மாட்டுக்கு மஞ்சள், குங்குமம் இடுவர். பொங்கல், தேங்காய், பழங்கள், வெற்றிலை பாக்கு போன்றவற்றைப் படைத்து வழிபடுவர். மாட்டுப்பொங்கல் நாளிலோ அதற்கு அடுத்த நாளிலோ சில ஊர்களில் மஞ்சுவிரட்டு நடைபெறும். மஞ்சுவிரட்டு என்பது மாடுகளை அடக்கித் தழுவும் வீர விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டு மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல் என்றும் அழைக்கப்படுகிறது.

**தெரிந்து தெளிவோம்**

திருவள்ளுவர் பொ.ஆ.மு 31இல் பிறந்தவர். எனவே, திருவள்ளுவராண்டைக் கணக்கிட நடைமுறை ஆண்டுடன் 31ஐக் கூட்டிக்கொள்ள வேண்டும். (எ.கா.) 2018 + 31 = 2049

**காணும் பொங்கல்**

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல் ஆகும். இந்நாளில் உற்றார் உறவினர் மற்றும் நண்பர் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழ்வர். குடும்பத்தினருடன் விரும்பிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் பொழுதைக் கழிப்பர். மேலும் பட்டிமன்றங்கள், கலைநிகழ்ச்சிகள் முதலியவற்றை நடத்துவர். விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டுவர்.

இயற்கை, உழைப்பு, நன்றியுணர்வு, பண்பாடு ஆகியவற்றைப் போற்றும் விழாவே பொங்கல் விழா ஆகும். உலகு எங்கும் உள்ள தமிழர்கள் பொங்கல் திருவிழாவை மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர்.

**தெரிந்து தெளிவோம்**

அறுவடைத் திருநாள் ஆந்திரா, கர்நாடகா, மகாராட்டிரா, உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மகரசங்கராந்தி என்று கொண்டாடப்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தில் லோரி என்று கொண்டாடப்படுகிறது. குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் உத்தராயன் என்று கொண்டாடப்படுகிறது.

## கற்பவை கற்றபின்

1. உங்கள் ஊரில் கொண்டாடப்படும் பிற விழாக்கள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.
2. உங்கள் பள்ளியில் கொண்டாடப்படும் தேசியவிழாக்களின் பட்டியலை உருவாக்குக.
3. தமிழகத்தில் ஏறுதழுவுதல் நடக்கும் இடங்களின் பெயர்களைத் தொகுக்க .
4. உங்களுக்குப் பிடித்த விழா எது? ஏன்?



6th Tamil 077-205.indd 107 23/05/18 3:50 PM

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கதிர் முற்றியதும் ___________ செய்வர்.

   அ) அறுவடை ஆ) உரமிடுதல் இ) நடவு ஈ) களையெடுத்தல்

2. விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால் _________ கட்டுவர்.

   அ) செடி ஆ) கொடி இ) தோரணம் ஈ) அலங்கார வளைவு

3. பொங்கல்+அன்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ___________

   அ) பொங்கலன்று ஆ) பொங்கல்அன்று

   இ) பொங்கலென்று ஈ) பொங்கஅன்று

4. போகிப்பண்டிகை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________

   அ) போகி+பண்டிகை ஆ) போ+பண்டிகை

   இ) போகு+பண்டிகை ஈ) போகிப்+பண்டிகை

5. பழையன கழிதலும்____________ புகுதலும்.

   அ) புதியன ஆ) புதுமை இ) புதிய ஈ) புதுமையான

6. பச்சைப் பசேல் என்ற வயலைக் காண இன்பம் தரும்.

   பட்டுப் போன மரத்தைக் காண _____________ தரும்.

   அ) அயர்வு ஆ) கனவு இ) துன்பம் ஈ) சோர்வு

K1JE1J

சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) பொங்கல் ஆ) செல்வம் இ) பண்பாடு

குறுவினா

1. போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?
2. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?

சிறுவினா

காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?

சிந்தனை வினா

1. பொங்கல் விழாவின் போது உங்கள் ஊரில் என்னென்ன சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள்?
2. காணும் பொங்கல் எவ்வாறு மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கிறது?




6th Tamil 077-205.indd 108 23/05/18 3:50 PM

விரிவானம்

இயல் ஐந்து

# மனம் கவரும் மாமல்லபுரம்




கலைகளும் இலக்கியங்களும் ஒரு நாட்டின் பண்பட்ட நாகரிகத்தை உலகிற்கு உணர்த்துவன. தமிழர்கள் சிற்பம், ஓவியம் முதலிய கலைகளில் சிறந்திருந்தனர். காலத்தால் அழியாத கலைச் செல்வங்கள் பலவற்றைப் படைத்தனர். நூற்றாண்டுகள் பல கடந்தும் கலைநயம் குறையாமலும் அழகு சிதையாமலும் விளங்கும் கலைச்செல்வங்கள் பல தமிழகத்தில் உண்டு. அவற்றுள் ஒன்றைக் காண்போம் வாருங்கள்.

K1TA37



குளிர்ந்த காற்று வீசியது. வெளிச்சம் எங்கும் பரவியது. கயல் தன் கண்களை அகல விரித்துப் பார்த்தாள். 'என்ன இடம் இது? நாம் எங்கே இருக்கிறோம்?' கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள். அவளுக்கு முன்னால் ஒரு கோவில் தெரிந்தது. வியப்புடன் பார்த்தாள். 'என்ன இது? கோவில் போலவும் இருக்கிறது. தேர் போலவும் இருக்கிறதே!' இதைப் பற்றி யாரிடம் கேட்பது எனத் திகைத்து நின்றாள். அப்போது தூரத்தில் ஒருவர் குதிரையில் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவர் தோற்றத்தில் அரசரைப் போல இருந்தார். 'இவர் யாராக இருக்கும்? சரி அருகில் வரட்டும் பார்க்கலாம்' என எண்ணினாள். குதிரை அவள் அருகில் வந்து நின்றது. குதிரையில் இருந்து அவர் இறங்கினார்.

கயல் அவரிடம், "ஐயா! வணக்கம். தாங்கள் பார்ப்பதற்கு அரசர் போல் உள்ளீர்கள். தாங்கள் யார் என்று தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டாள்.



6th Tamil 077-205.indd 109 23/05/18 3:50 PM

"நான் பல்லவ அரசன். என் பெயர் நரசிம்மவர்மன். நான் மற்போரில் சிறந்தவன். அதனால், எனக்கு மாமல்லன் என்னும் பெயரும் உண்டு. உன் பெயர் என்ன?" என்று கேட்டார் அவர்.

"ஐயா, என் பெயர் ம.தி.கயல்"

"மதி கயல் என்று இரண்டு பெயர்களா உனக்கு?"

"இல்லை ஐயா. ம. தி. என்பவை என் பெயரின் தலைப்பெழுத்துகள். என் அம்மா பெயர் மங்கை. என் அப்பா பெயர் திருநாவுக்கரசு. அப்பெயர்களின் முதல் எழுத்துகளைத் தலைப்பெழுத்துகளாக வைத்துள்ளேன்"

"அப்படியா? மகிழ்ச்சி. இங்குத் தனியாக எதைப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்?"

"இது கோவிலா தேரா என்று தெரியவில்லை. அதனால்தான் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டு இருக்கிறேன்" என்றாள் கயல்.

"நான் உனக்கு விளக்குகிறேன் கயல். ஒரே பாறையில் செதுக்கிச் செய்யப்பட்ட கோவில் இது. இரதம் (தேர்) போன்ற வடிவத்தில் இருக்கிறது. அதனால் இதனை இரதக் கோவில் என்று அழைக்கிறார்கள்" என்று விளக்கினார் மாமல்லர்.

கயல் சுற்றிலும் பார்த்தாள். அங்கே மொத்தம் ஐந்து இரதங்கள் இருந்தன. "இவை என்ன ஐயா?" என்று கேட்டாள்.

"ஐந்து இரதங்கள் உள்ளதால் இவ்விடத்திற்குப் பஞ்சபாண்டவர் இரதம் என்று பெயர். இவையெல்லாம் என் காலத்தில் உருவாக்கப்பட்டவை" என்றார் மாமல்லர்

"வியப்பாக உள்ளதே! நீங்கள் நீண்ட காலத்துக்கு முன்பு வாழ்ந்தவர் அல்லவா?"

"ஆமாம் கயல். நான் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன்"

"இவற்றை உருவாக்குவதற்குக் கற்களை எங்கிருந்து கொண்டு வந்தீர்கள்?"

"இங்கேயே இருந்த பாறைகளில்தான் இவற்றை உருவாக்கினோம்"

**தெரிந்து தெளிவோம்** **மாமல்லபுரத்தில் காணவேண்டிய இடங்கள்**

1. அர்ச்சுனன் தபசு
2. கடற்கரைக் கோவில்
3. பஞ்சபாண்டவர் ரதம்
4. ஒற்றைக்கல் யானை
5. குகைக்கோவில்
6. புலிக்குகை
7. திருக்கடல் மல்லை
8. கிருஷ்ணரின் வெண்ணெய்ப் பந்து
9. கலங்கரை விளக்கம்

"அப்படியா? இவற்றைக் கோவிலாக மாற்றவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படித் தோன்றியது?"

"நான் சிறுவனாக இருந்த போது ஒருநாள் என் தந்தையுடன் இந்தக் கடற்கரைக்கு வந்தேன். இந்தப் பாறையின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தேன். இந்தப் பாறையின் நிழல் யானை போல் தரையில் விழுந்தது. என் தந்தையிடம் அதனைக் காட்டினேன். என் தந்தை, 'ஆம், நரசிம்மா! இது யானை போலத்தான் தெரிகிறது. அதோ அந்தக் குன்றின் நிழலைப் பார். கோவில் போலத் தெரிகிறது' என்றார். 'ஆமாம் அப்பா! அந்தக் குன்றைக் கோவிலாகவும், இந்தக் குன்றைக் கோவில் முன் நிற்கும் யானை போலவும் மாற்றிவிட்டால் நன்றாக இருக்குமே' என்றேன். 'நல்ல சிந்தனை. இவை இரண்டை மட்டும் அல்ல, இங்குள்ள ஒவ்வொரு குன்றையும் சிற்பமாக மாற்றலாம். ஒவ்வொரு பாறையையும் நந்தி, சிங்கம், யானை என்று மாற்றுவோம். இந்தக் கடற்கரையையே சிற்பக்கலைக் கூடமாக மாற்றிவிடலாம்' என்று கூறினார் என் தந்தை" என்று சொல்லி முடித்தார் மாமல்லர்.

"உங்கள் தந்தையும் அரசரா?" என்று கேட்டாள் கயல்.

"ஆமாம் கயல். எனக்கு முன்பு பல்லவ நாட்டை ஆட்சி செய்தவர் என் தந்தை மகேந்திரவர்ம பல்லவர். அவர் காலத்தில் இந்தச் சிற்பப் பணி தொடங்கியது. என்காலம், என்மகனின் காலம், என் பேரனின் காலம்வரை நடைபெற்றது. நான்கு தலைமுறைகளில் உருவாக்கப்பட்டவை இந்தச் சிற்பங்கள்" என்று பெருமையுடன் கூறினார் மாமல்லர்.

"இந்தச் சிற்பங்களை எல்லாம் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றுகிறதே" என்றாள் கயல்.



"சிற்பக் கலையின் உச்சத்தை நீ பார்க்க வேண்டுமா? என்னுடன் வா!" என்று கூறிக் கயலை அழைத்துச் சென்றார் மாமல்லர்.

இருவரும் அர்ச்சுனன் தபசு என்னும் பாறையின் முன் வந்து நின்றனர். பாறையில் இருந்த சிற்பங்களைக் கண்டு கயல் வியந்து போனாள். "ஐயா! இந்தப் பாறையில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை உயிருள்ளவற்றை நேரில் பார்ப்பது போல அழகாக உள்ளன" என்றாள்.

"ஆம் கயல். இவற்றுக்குப் புடைப்புச் சிற்பங்கள் என்று பெயர். இந்த இரண்டு பாறைகளிலும் நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட சிற்பங்கள் உள்ளன."

"அங்கே ஒருவர் கண்களை மூடி, இரு கைகளையும் உயர்த்தி, வணங்குவது போல ஒரு சிற்பம் உள்ளது. அவரது உடல் மெலிந்து, எலும்புகளும் நரம்புகளும் வெளியே தெரிவது போல அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது."



"ஆம் கயல். அர்ச்சுனன் தவம் செய்யும் காட்சி இது. இந்தச் சிற்பம் உள்ளதால்தான், இப்பாறைக்கு 'அர்ச்சுனன் தபசு' என்று பெயர்."

"அப்படியா! இந்த இடத்தில் இரண்டு பாறைகளுக்கு இடையில் நீர் வடிந்து வந்த தடம் தெரிகிறதே?"

"ஆம் கயல். அங்கே ஆகாயகங்கை பூமிக்கு வருவது போல அமைக்கப்பட்டு உள்ளது. மழைக்காலத்தில் இதன் வழியாக மழைநீர் பாய்ந்து வரும். அப்போது உண்மையிலேயே கங்கை ஓடி வருவதைப் போல இருக்கும்" என்றார் மாமல்லர்.

"இங்கே யானை சிற்பங்கள் அழகாக உள்ளன. சிங்கம், புலி, அன்னப்பறவை, உடும்பு, குரங்குகள் என எல்லாமே உயிருள்ளவை போலச் செதுக்கப்பட்டுள்ளன. இங்கே பாருங்கள்! மான் தன் காலைத் தூக்கி முகவாயைச் சொறிந்து கொள்வது போன்ற சிற்பம். அது பார்ப்பதற்கு உண்மையிலேயே மான் ஒன்று இருப்பதைப் போலவே தோன்றுகிறது" என்று வியப்புடன் கூறினாள் கயல்.

"இங்கு இன்னும் நிறைய இடங்கள் உள்ளன கயல். இந்த ஊரைச் சுற்றிப் பார்க்க ஒரு நாள் போதாது" என்றார் மாமல்லர்.

"இந்த ஊரின் பெயர் என்ன ஐயா? " என்று ஆர்வத்தோடு கேட்டாள் கயல்.

"இதுதான் தமிழகத்தின் மிகப்பெரிய சிற்பக்கலைக் கூடமாகிய மாமல்லபுரம்"

**தெரிந்து தெளிவோம்**

**சிற்பக் கலை நான்கு வகைப்படும்.**

குடைவரைக் கோயில்கள்

ஒற்றைக் கல் கோயில்கள்

கட்டுமானக் கோயில்கள்

புடைப்புச் சிற்பங்கள்

இந்த நான்கு வகைகளும் காணப்படும் ஒரே இடம் மாமல்லபுரம்.



6th Tamil 077-205.indd 112 23/05/18 3:50 PM

கயல் சிந்தித்தவாறு "உங்கள் பெயர் மாமல்லன். இந்த ஊரின் பெயர் மாமல்லபுரம். இரண்டுக்கும் ஏதோ ஒற்றுமை உள்ளதே!" எனக் கேட்டாள்.

"ஆம் கயல். இந்த ஊர் உருவாக எனது கேள்விதான் காரணம் என்பதால் என் தந்தை என் பெயரையே இந்த ஊருக்கு வைத்துவிட்டார். இக்காலத்தில் இவ்வூரை மகாபலிபுரம் எனவும் அழைக்கிறார்கள்".

"உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி ஐயா!"

"எனக்கும்தான் கயல். உன்னோடு பேசிக் கொண்டிருந்ததில் என் இளமைக் காலத்திற்கே சென்றுவிட்டது போல உணர்கிறேன். மிக்க மகிழ்ச்சி மங்கை திருநாவுக்கரசு கயல்."

அப்போது "கயல், கயல் எழுந்திரு. இன்று மாமல்லபுரத்திற்குக் கல்விச் சுற்றுலா செல்ல வேண்டும் என்று கூறினாயே! இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாய். தூக்கத்தில் எங்கள் பெயரை வேறு சொல்லிக் கொண்டிருக்கிறாய்" என்னும் தாயின் குரல் கேட்டுக் கண் விழித்தாள் கயல்.

"இவ்வளவும் கனவா? நேற்று மாமல்லபுரத்தைப் பற்றி ஆசிரியர் கூறிய செய்திகளை நினைத்துக் கொண்டே தூங்கினேன். அதனால் இவை எல்லாம் கனவில் வந்துள்ளன. கனவில் கண்டவற்றை இன்று நேரில் காணப்போகிறேன்" என்று எண்ணி மகிழ்வுடன் சுற்றுலா செல்லத் தயாரானாள் கயல்.

## கற்பவை கற்றபின்

1. நீங்கள் சென்ற சுற்றுலா பற்றிய செய்திகளை நண்பர்களுடன் பகிர்க.
2. தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டுக.

## மதிப்பீடு

K2364U

### சிறுவினா

1. மாமல்லபுரம் எப்படி உருவானது? அதற்குக் காரணமான நிகழ்வு யாது?
2. மாமல்லபுரத்தில் "அர்ச்சுனன் தபசு"பாறையில் உள்ள சிற்பங்களைப் பற்றி எழுதுக.

### சிந்தனை வினா

1. மாமல்லபுரச் சிற்பங்கள் பாறைகளில் செதுக்கப்பட்டவை. வேறு எந்தெந்தப் பொருள்களால் சிற்பங்களைச் செய்யலாம்?
2. கலைகளுள் ஒன்று சிற்பக்கலை. இது போன்ற பிற கலைகளின் பெயர்களை எழுதுக.



6th Tamil 077-205.indd 113 23/05/18 3:50 PM

## இயல் ஐந்து

# மயங்கொலிகள்

மணம் – மனம்

மேலே உள்ள இரண்டு சொற்களையும் கவனியுங்கள். உச்சரிக்கும் போது ஏறத்தாழ ஒன்று போலவே ஒலிக்கின்றன. ஆனால் இரண்டுக்கும் இடையே பொருள் வேறுபாடு உண்டு. இவ்வாறு உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை *மயங்கொலிகள்* என்கிறோம்.


ண, ன, ந

ல, ழ, ள

ர, ற ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

K2C26H

### ண, ன, ந – எழுத்துகள்




ண – நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப் பகுதியைத் தொடுவதால் ணகரம் பிறக்கிறது.

ன – நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் னகரம் பிறக்கிறது.

ந – நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் நகரம் பிறக்கிறது.

(ட், ண்) (த், ந்) (ற், ன்) ஆகியவை இன எழுத்துகள்.

இந்த இன எழுத்துகளைக் கொண்டு

டகரத்தை அடுத்து வரும் ணகரம் டண்ணகரம் என்றும்,

தகரத்தை அடுத்து வரும் நகரம் தந்நகரம் என்றும்,

றகரத்தை அடுத்து வரும் னகரம் றன்னகரம் என்றும் அழைக்கப்படுகிறது.

**தெரிந்து தெளிவோம்**


**சொற்களில் ண, ன இடம்பெறும் வகை**


ட என்னும் எழுத்துக்கு முன் ண் வரும்
(எ.கா.) கண்டம், வண்டி, நண்டு
ற என்னும் எழுத்துக்கு முன் ன் வரும்
(எ.கா.) மன்றம், நன்றி, கன்று


ணகரம் வர வேண்டிய இடத்தில் னகரம் எழுதப்படுமானால் பொருள் மாறுபடும் என்பதை உணர்க

| | | |
|---|---|---|
| (எ. கா.) | வாணம் – வெடி | பணி - வேலை |
| | வானம் - ஆகாயம் | பனி – குளிர்ச்சி |

**ல, ள, ழ – எழுத்துகள்**








ல– நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் பற்களின் அடியைத் தொடுவதால் லகரம் தோன்றும்.


ள– நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ளகரம் தோன்றும். இதனைப் பொது ளகரம் என்கிறோம்.


ழ– நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் ழகரம் தோன்றும். (ளகரமும் ழகரமும் ஒரே இடத்தில் ஒலிக்கப்படும்). ழ தமிழுக்கே சிறப்பானது. எனவே இதனைச் சிறப்பு ழகரம் என்று அழைக்கிறோம்.

பொருள் வேறுபாடு உணர்க.

| | | |
|---|---|---|
| விலை | -பொருளின் மதிப்பு | இலை – செடியின் இலை |
| விளை | - உண்டாக்குதல் | இளை – மெலிந்து போதல் |
| விழை | - விரும்பு | இழை – நூல் இழை |

**ர, ற – எழுத்துகள்**






ர - மேல் அண்ணத்தில் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் ரகரம் தோன்றுகிறது.

இது இடையின எழுத்து என்பதால் இடையின ரகரம் என்கிறோம்.

ற - மேல் அண்ணத்தில் மையப்பகுதியை உரசுவதால் றகரம் தோன்றுகிறது

இது வல்லின எழுத்து என்பதால் வல்லின றகரம் என்கிறோம்.



6th Tamil 077-205.indd 115 23/05/18 3:50 PM

**பொருள் வேறுபாடு உணர்க**

ஏரி - குளம் கூரை - வீட்டின் கூரை

ஏறி - மேலே ஏறி கூறை - புடவை

## கற்பவை கற்றபின்

1. ல, ள, ழ ஆகிய எழுத்துகள் அமைந்த சொற்களைப் பொருளுடன் தொகுக்க.
2. மயங்கொலி எழுத்துகளை உங்களது நண்பரிடம் ஒலித்துக் காட்டுக.

## மதிப்பீடு

K2KX85

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1) சிரம் என்பது ------------------- (தலை / தளை)
2) இலைக்கு வேறு பெயர் ---------- (தளை / தழை)
3) வண்டி இழுப்பது --------------- (காலை / காளை)
4) கடலுக்கு வேறு பெயர் ---------- (பரவை / பறவை)
5) பறவை வானில் ---------------- (பறந்தது / பரந்தது)
6) கதவை மெல்லத் ---------------- (திறந்தான் / திரந்தான்)
7) பூ ----------------------- வீசும் (மனம் /மணம்)
8) புலியின் --------- சிவந்து காணப்படும். (கன் /கண்)
9) குழந்தைகள் ------------ விளையாடினர். (பந்து /பன்து)
10) வீட்டு வாசலில் ------------ போட்டனர். (கோலம் / கோளம்)

தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

1) எண் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் மனம் வீசின.
2) தேர்த் திருவிலாவிற்குச் செண்றனர்.
3) வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்ளது.

பொருள் வேறுபாடறிந்து எழுதுக.

போரில் பயன்படுத்தியது வாள்.

பூனைக்கு உள்ளது வால்.

வாசலில் போடுவது _________

பந்தின் வடிவம் ____________



6th Tamil 077-205.indd 116 23/05/18 3:50 PM